www.nunnarivu.com

# நீதியின் நுண்ணறிவு

NEETHIYIN NUNNARIVU

புலனாய்வு இதழ்

Volume : 6 | Issue : 2 | Tamil Monthly | November 2025 | Price : Rs. 15/-

மலர் : 6 | இதழ் : 2 | தமிழ் மாத இதழ் | நவம்பர் 2025 | விலை : ரூ. 15/-



## கண்ணகி நகர் கார்த்திகா, அபினேஷுக்கு தலா ரூ. 25 லட்சம்

முதல்வர் ஸ்டாலின் கௌரவிப்பு!



## “மக்கள் தீர்ப்புக்கு தலை வணங்குகிறோம் அறிக்கை தயார் செய்துகொள்ளுங்கள்”

விஜய் காட்டம்



## கோவை மாணவி பாலியல் வன்கொடுமை...

3 பேரை சுட்டுப் பிடித்த போலீஸார்..!



அரசு வேலை வாங்கித்தருவதாக கூறி

## சேலம் போக்குவரத்து பிஆர்ஓ சண்முகசுந்தரம் பல கோடி ரூபாய் மோசடி...


SS AQUA
TECHNOLOGIES
SWIMMING POOL, JACUZZI & STEAM,
FOUNTAINS, LANDSCAPING & IRRIGATION
The pool gives good vibes
+ 91 96264 34377
www.ssaquatechnologies.com


SODEX
Liquid Laundry Detergent
SODEX
Floor Cleaner
Sandal
SODEX
Toilet Cleaner
Active Formula
5 in 1
SODEX
DISHWASH LIQUID
SODEX
Fabric Softener
SODEX
Clean & Care.
Manufactured & Marketed By:
ECOGUARD LABS
Plot # 14, Rojambal Nagar Kanna puram, Mugaglivakkam Chennai 600125
Contact: 95000 76229 / 95000 76411
பொருளோ தரம்
வீட்டிற்க்கோ சுகாதாரம்!!

www.nunnarivu.com
நீதியின் நுண்ணறிவு
NEETHIYIN NUNNARIVU புலனாய்வு இதழ்

ஆசிரியர் வெளியீட்டாளர்
**R.சிவகுமார்**

இணை ஆசிரியர்கள்
J.கணேசபாண்டி, A.விஜய், G.ஜெயபிரகாஷ்நாராயணன்

துணை ஆசிரியர்கள்
D.சிவராஜ், K.பாரதிராஜா, G.சுரேந்திரன்,
B.காந்திநாதன், S.ராஜ்நாராயணன்

கௌரவ ஆலோசகர்கள்
A.கந்தசாமி S.P.
காவல்துறை கண்காணிப்பாளர் (ஓய்வு)
சுபாஷ் சந்திரபோஸ்
காவல் துணை கண்காணிப்பாளர் (ஓய்வு)
Dr.K.முருகேசன் M.B.B.S., D.L.O.,
மா.செல்வராஜ்
( முன்னாள் முதல்வர் – குருநானக்கல்லூரி )
( மாநில தகவல் ஆணையர் )
சோம்புராஜன்
கூடுதல்ஆணையர், தொழிலாளர்துறை (ஓய்வு)
டாக்டர். மணிவண்ணன் B.S.M.S.
S.வீரப்பன்

முதன்மை நிருபர்கள்
M.சுப்பிரமணியன், R.சதீஷ்குமார், V.மாதவன்,
A.ராஜ்மோகன்

நிருபர்கள்
R.இன்பசேகரன், G.மோகன், S.சாம்எட்வின்,
C.சரவணன், S.சீனிவாசன், S.சஞ்சய்குமார்,
இம்ரான்கான், A.மதிமாறன்,
J.ஜெஸ்டின்டேவிஸ், மு.ஐசக், தங்கபாண்டியன்

சட்ட ஆலோசகர்கள்
K.M.S.செந்தில்குமார் BSc., B.L.,
M.சரவணன் M.Sc., B.L.,
R.வீரராகவன் B.Sc., M.A., M.B.M., LL.B.,

வடிவமைப்பு : 4 மீடியா டிசைன்ஸ்

நிர்வாக அலுவலகம்:
எண். 14/88, வெங்கடேஸ்வரா நகர், 3வது
மெயின்ரோடு, வேளச்சேரி, சென்னை– 42.
போன் : 9884949445, 99624 56555
nunnarivuidhal@gmail.com
www.nunnarivu.com

Allrights reserved legal jurisdiction in chennai city court only. Nothing in NEETHIYIN NUNNARIVU is intended to defame any person. But expressed in good faith pursuit of truth and public good.

இந்தியாவில் பெண்கள் விவசாயம் முதல் விண்வெளி வரை அனைத்து துறைகளிலும் சாதனை படைத்து வருகின்றனர். கல்வி, வேலைவாய்ப்பு போன்ற துறைகளில் பெண்கள் முன்னேறி, பல சவால்களை தாண்டி உலக அளவிலும் தனித்தன்மையுடன் திகழ்கின்றனர். ஐஐடி மாணவி 'பெண் அயன்மேன்' பட்டம் வென்றது, 50 வயதுக்கு மேற்பட்ட சாதனை பெண்களின் பட்டியலில் ஊர்மிளா, கிரண் மஜும்தார் ஷா, ஷீலா படேல் ஆகிய 3 இந்திய பெண்கள் இடம் பெற்றுள்ளனர். வயது வித்தியாசமின்றி பெண்கள் பல துறைகளில் தொடர்ந்து சாதனை படைத்து வருகின்றனர். அந்த வரிசையில் மகளிர் உலக கோப்பை போட்டியில் இந்திய அணி வென்று சாதனை படைத்துள்ளது. இறுதிப்போட்டியில் ஆட்ட நாயகி விருது வென்ற ஷபாலி வர்மாவுக்கு வயது 21 ஆண்டுகள் 279 நாட்கள்தான்.

இதன் மூலம் ஐ.சி.சி. ஆண்கள் மற்றும் மகளிர் உலகக்கோப்பை வரலாற்றில் இறுதிப்போட்டியில் குறைந்த வயதில் ஆட்ட நாயகி விருதை வென்ற வீராங்கனை என்ற உலக சாதனையை ஷபாலி படைத்துள்ளார். மகளிர் உலக கோப்பை வரலாற்றிலேயே அதிக பரிசுத் தொகை கொண்டதாகவும் அமைந்தது. அந்த வகையில் கோப்பையை வென்ற இந்திய மகளிர் அணிக்கு சுமார் 37 கோடி ரூபாய் பரிசு தொகையாக வழங்கப்பட்டது. பிசிசிஐ சார்பிலும் 51 கோடி ரூபாய் இந்திய அணிக்கு பரிசாக அறிவிக்கப்பட்டுள்ளது. வரலாற்று வெற்றியை பதிவு செய்த இந்திய அணிக்கு வாழ்த்துகள் குவிந்து வருகின்றன. பிரதமர் மோடி, தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின், நடிகர் ரஜினிகாந்த் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் வாழ்த்துகளை தெரிவித்து வருகின்றனர். மொத்தத்தில் பரிசு மற்றும் பாராட்டு மழையில் மகளிர் அணியினர் நனைந்து வருகின்றனர்.



– ஆர்.சிவகுமார்,
ஆசிரியர்



# "மக்கள் தீர்ப்புக்கு தலைவணங்குகிறோம் அறிக்கை தயார் செய்துகொள்ளுங்கள்"

## விஜய் காட்டம்

கரூர் வேலுச்சாமிபுரத்தில் கடந்த செப்டம்பர் 27ஆம் தேதி தவெக தலைவர் விஜய் மேற்கொண்ட பரப்புரையின்போது ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர். இதையடுத்து, கட்சியின் நிர்வாக நடவடிக்கைகள் முடங்கியிருந்த நிலையில், ஒரு மாத இடைவெளிக்குப் பிறகு தீவிரமடைந்துள்ளன. இந்நிலையில், சென்னை மாமல்லபுரத்தில் தவெக தலைவர் விஜய் தலைமையில் அக்கட்சியின் சிறப்பு பொதுக்குழு கூட்டம் நடைபெற்றது. இதில் கரூர் கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்த 41 பேருக்கு 2 நிமிடம் மவுன அஞ்சலி செலுத்தப்பட்டது.

பின்னர் தவெக தலைவர் விஜய் பேசியதாவது; சொல்ல முடியாத அளவிற்கு வேதனையிலும் வலியிலும் இவ்வளவு நாள் நாம் இருந்தோம், அப்படிப்பட்ட இந்த சூழலில் நம்முடைய சொந்தங்களின் மனம்பற்றி இருக்க வேண்டியது நம் கடமை, அதனால்தான் இவ்வளவு காலம் மௌனம் காத்து வந்தோம்.

அப்படி அமைதியாக இருந்த நேரத்தில் நம்மை பற்றி வன்ம அரசியல் வலைகள் ,அர்த்தமற்ற அவதூறுகள், என நம்மை சுற்றி பின்னப்பட்டது பரப்பப்பட்டது. இவற்றை அனைத்தையும் சட்டம் மற்றும் சத்தியத்தின் துணையோடு துடைத்து எறிய தான் போகிறோம்.

ஆனால் அதற்கு முன்பு தமிழக சட்டமன்றத்தில் நமக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட ஒரு உரைக்கு ஒரு நாகரீக பதிலடி கொடுக்க வேண்டும் என நான் நினைக்கிறேன்.

அரசியல் செய்ய விருப்பம் இல்லை என அடிக்கடி சொல்கின்ற முதல்வர் நம்மை குறிப்பிட்டு பல்வேறு அவதூறுகளை பதிவு செய்வதன் வாயிலாக பெருந்தன்மையை பெயரளவில் பேசும் முதல்வர், தமிழக சட்டமன்றத்தில் பேசிய பேச்சுக்கள் எவ்வளவு வன்மத்தை கக்கி இருக்கிறார்கள் எனவும் எப்படிப்பட்ட அரசியல் என்று தமிழக மக்கள் உணராமலா இருப்பார்கள்.

இந்தியாவிலேயே எந்த அரசியல் கட்சித் தலைவர்களுக்கும் இல்லாத அதிக கட்டுப்பாடு நமக்கு கொடுக்கப்பட்டிருந்தது பிரச்சார நேரத்தில் பேருந்துகுள் மட்டும் தான் இருக்க வேண்டும், மக்களை பார்த்து கையசைக்க கூடாது, பேருந்து மேலே ஏறக்கூடாது என பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தது.

இப்படி ஒரு அரசியல் காழ்புணர்ச்சியுடன் நேர்மை திறனற்று நம்மை பற்றி குற்றம் சாட்டியுள்ள குறுகிய மனம் கொண்ட தமிழக முதல்வருக்கு ஒரு சில கேள்விகளை கேட்க விரும்புகிறேன்.

பொய் மூட்டைகளையும், அவதூர்களையும் அவிழ்த்து விட்ட, கோடிகளைக் கொட்டி அமர்த்தப்பட்ட அறிவார்ந்த வழக்கறிஞர்களுக்கும், கபட நாடக திமுக அரசின் தில்லுமுல்லுகளை தாக்கு பிடிக்க இயலாமல் உச்ச நீதிமன்றத்தில் நின்றதை மக்கள் அறியாமலா இருப்பார்கள்.

கரூர் சம்பவத்திற்கு பிறகு அவசர அவசரமாக ஒரு தனி நபர் ஆணையம் அந்த தனிநபர் ஆனையத்தையே அவமதிப்பது போல், அரசு உயர் அதிகாரிகள் காவல் துறை உயர் அதிகாரிகள் அனைவரையும் ஒன்றிணைத்து ஒரு செய்தியாளர் சந்திப்பு இவை எல்லாம் ஏன் நடக்கிறது எதற்காக நடக்கிறது. இப்படி ஒட்டுமொத்த தமிழக மக்களும் கேள்வி எழுப்பத் தொடங்கினார்கள் என இதையும் தமிழக முதல்வர் மறந்து விட்டாரா.

அதன் பிறகு உச்சநீதி மன்றம் அந்த




தனிநபர் ஆணையத்தை தலையில் கொட்டி வீட்டுக்கு அனுப்பி விட்டார்கள் அது வேறு விஷயம்.

இப்படி கேள்வி கேட்டவுடன் ஏதாவது பதில் சொல்ல வேண்டும் என உண்மை நிலையை தெளிவுபடுத்த தான் அப்படி என்று சட்ட ரீதியாகவும் சத்தியத்திற்காகவும் நடந்தது போல ஏதோ சாமர்த்தியமாக பேசுவது போல பேசி இருக்கிறார்கள். இப்படி ஒரு 50 வருடமாக பொது வாழ்க்கையில் இருந்து கொண்டு ஒரு முதல்வர் சொல்வது எவ்வளவு பெரிய வடிகட்டின பொய் எனவும் நான் சொல்லவில்லை உச்ச நீதிமன்றம் சொல்லி இருக்கிறது.

அரசு காவல் உயர் அதிகாரிகள் ஊடகங்களிடம் பேசியது என்பது பொதுமக்களிடையே நியாயமான விசாரணையை நடக்குமா என சந்தேகத்தை ஏற்படுத்தக்கூடும் என்றும் நியாயமான விசாரணை மூலமே இந்த சந்தேகத்தை மீட்டெடுக்க வேண்டும் என்றும் உச்சநீதிமன்றம் தமிழக அரசின் தலையில் ஓங்கி நறுக்கு நறுக்கு என கொட்டியதை முதல்வர் அவர்கள் மறந்துவிட்டாரா.

உச்சநீதிமன்றம் கேட்ட கேள்விகளுக்கு தமிழக அரசு சார்பில் நியமிக்கப்பட்ட அரசு வழக்கறிஞர்கள் பதில் சொல்ல முடியாமல் மௌனம் காத்தார்களே அதை தமிழக முதல்வர் மறந்து விட்டாரா. உச்சபட்ச அதிகார மயக்கத்திலிருந்து தமிழக முதல்வர் பேசினாரோ

மனிதாபிமானம் அரசியல் அறம் மாண்பு இவை எல்லாம் எதுவுமே இல்லாமல் வெறும் பேச்சில் மட்டும் பேசிக் கொண்டு அரசியல் ஆட்டத்தை ஆட தொடங்கி விட்டார் தமிழக முதல்வர்.

இப்பொழுது நான் கேட்ட கேள்வி அனைத்தும் நான் கேட்கவில்லை உச்ச நீதிமன்றம் கேட்டது. இவையெல்லாம் ஏன் எதற்கு என முதல்வர் அவர்களுக்கு புரிகின்றதா.

உச்சநீதிமன்றம் மட்டுமல்ல நிஜத்திலும் மக்களுக்கு தமிழக அரசு மீது இருக்கின்ற நம்பிக்கை முழுவதுமாக மண்ணில் புதைந்து விட்டது இதுவாவது தமிழக முதல்வர் அவர்களுக்கு புரியுதா அல்லது புரியவில்லையா அப்படி இல்லை என்றால் வருகின்ற 2026 சட்டமன்றத் தேர்தலில் இந்த திமுக தலைமைக்கு ஆழமாகவும் அழுத்தமாகவும் மக்கள் புரிய வைப்பார்கள்.

அப்பொழுது கூட இவர்கள் என்ன செய்வார்கள் தெரியுமா ஐந்து வருடத்திற்கு ஒருமுறை பழக்க தோஷத்தில் ஒரு அறிக்கை வெளியிடுவார்கள். மக்கள் தீர்ப்புக்கு தலை வணங்குகிறோம் அப்படி என்று. ஒரு அறிக்கையை வெளியிட்டு அறிவாலயத்திற்குள் ஓடி ஒளிந்து கொள்வார்கள். இப்பொழுதே அந்த அறிக்கையை தயார் செய்து வைத்துக் கொள்ளுங்கள் மக்கள் தீர்ப்புக்கு தலை வணங்குகிறோம் என்று.

இயற்கையும் இறைவனும் நம் தமிழக சொந்தங்களின் வடிவங்களில் மாபெரும் சக்தியாக நம் கூட நிற்கும் பொழுது எம் மக்களுக்கான அரசியலை தடுப்பவர் யார். அதனால் தோழர்களே நமக்கு வந்திருக்கும் இந்த இடையூறு தற்காலிக இடையூறு மட்டுமே அதனால் அனைத்தையும் தகர்த்தெறிவோம், மக்களோடு கைகோர்த்து நிற்போம், மக்களுடன் களத்தில் இருப்போம். நம் பயணத்தில் தடம் மாறவே மாட்டோம். இப்பொழுதும் சொல்கிறேன் 2026 —ல் இரண்டே இரண்டு பேருக்கு தான் போட்டியே ஒன்று டிவிகே இன்னொன்று திமுக .

இந்த போட்டி இன்னும் பலமாக மாறப்போகிறது. நூறு சதவீதம் வெற்றி நமக்கே, வாகை சூடுவோம் வரலாறு படைப்போம், நம்பிக்கையுடன் இருங்கள், நல்லதே நடக்கும், வெற்றி நிச்சயம் என பேசினார்.

# வேளச்சேரி பகுதியில் சுமார் ரூ.4 கோடி மதிப்புள்ள காலிமனையை ஆள்மாறாட்டம் மற்றும் போலி ஆவணங்கள் மூலம் அபகரித்த வழக்கில் 5 நபர்கள் கைது செய்யப்பட்ட நிலையில் மேலும் மூவர் கைது.

**மத்திய குற்றப்பிரிவு நடவடிக்கை.**

தெலுங்கானா மாநிலம், ஹைதராபாத், ஹரிதவனம், பாச்சுப்பள்ளி பகுதியில் வசித்து வரும் திருமதி.விஜயசாமுண்டீஸ்வரி, வ/59, என்பவருக்கு சொந்தமான வேளச்சேரி கிராமம், விஜயநகர், பிளாட் எண்.2ல் அடங்கிய 4,230 சதுர அடி கொண்ட சுமார் ரூ.4 கோடி மதிப்புள்ள காலிமனையை சிலர் போலியான ஆதார் கார்டு, பான் கார்டு மற்றும் ஆவணங்களை பயன்படுத்தி ஆள்மாறாட்டம் செய்து அபகரித்துள்ளனர்.

எதிரிகள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கும்படி மேற்படி விஜயசாமுண்டீஸ்வரி 02.06.2025 அன்று காவல் ஆணையாளர் அவர்களிடம் கொடுத்த புகாரின் பேரில் மத்திய குற்றப்பிரிவு, நில மோசடி புலனாய்வு பிரிவு உதவி ஆணையாளர் திரு. வரதராஜன் அவர்கள் தலைமையில் வழக்குப் பதிவு செய்து காவல் ஆய்வாளர் அவர்களால் புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.







மேற்கண்ட புகாரில் உரிய துரித நடவடிக்கை எடுக்க சென்னை பெருநகர காவல் ஆணையாளர் திரு.ஆ.அருண், இ.கா.ப அவர்கள் உத்தரவின் பேரில் மத்திய குற்றப்பிரிவு கூடுதல் ஆணையாளர் திருமதி.A.ராதிகா, இ.கா.ப அவர்களின் வழிகாட்டுதலின் படி தனிப்படைகள் அமைக்கப்பட்டது. தனிப்படை போலீசார் உரிய ஆவணங்கள் மற்றும் பணபரிவர்த்தனை விபரங்கள் மூலம் வசிக்கும் நபரின் விபரங்களை பெற்று எதிரிகளை தேடி வந்த நிலையில், சொத்தின் உரிமையாளரான விஜயசாமுண்டீஸ்வரி பெயரில் ஆள்மாறாட்டம் செய்த முகப்பேர் மேற்கு, செந்தமிழ்நகரைச் சேர்ந்த 1.யசோதா பெ/வ 59, 2.பழனி ஆ/வ 43, 3.வனிதா பெ/வ 40, மற்றும் மேற்படி நபர்களை ஆள்மாறாட்டத்தில் ஈடுபடுத்தியும், போலி ஆவணங்களை தயார் செய்யவும் மூளையாக இருந்து செயல்பட்ட முகப்பேர் மேற்கு, வி.ஜி.பி நகரைச் சேர்ந்த V—7 நொளம்பூர் காவல் நிலைய சரித்திர பதிவேடு குற்றவாளி 4.மேகநாதன் (எ) குட்டி ஆ/வ 49 மற்றும் மேற்படி சொத்தை விற்பதில் உறுதுணையாக இருந்து ஆதாயம் அடைந்த வேளச்சேரி ராம்நகரைச் சேர்ந்த 5.அருணாச்சலம், ஆ/வ42 ஆகிய 5 நபர்களை கடந்த 16.09.2025 அன்று கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினர். அவர்களிடமிருந்து ஆள்மாறட்டத்திற்கு பயன்படுத்திய போலி ஆவணங்கள் பறிமுதல் செய்யப்பட்டது.

மேற்படி வழக்கில் தொடர்புடைய தலைமறைவு எதிரிகளை மத்திய குற்றப்பிரிவு, நில மோசடி புலனாய்வு பிரிவு தனிப்படை போலீசார் தீவிரமாக தேடிவந்த நிலையில் போலீசாருக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் தக்க புலன் வைத்து நிலபுரோக்கர்கள் 1.பத்மநாபன், வ/43, சூளைமேடு, சென்னை 2.ஐயப்பன், வ/46, மேற்கு தாம்பரம், சென்னை மற்றும் தனியார் வங்கியில் கலெக்ஷன் ஏஜென்டாக பணிபுரிந்து வரும் 3.சுகுமார், வ/38, வேளச்சேரி, சென்னை ஆகிய மூவரும் முறையே சூளைமேடு, மேற்கு தாம்பரம் மற்றும் வேளச்சேரியில் வைத்து (31.10.2025) கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்டு 3 எதிரிகளும் CCB & CBCID எழும்பூர் நீதிமன்றத்தில் (31.10.2025) ஆஜர்படுத்தப்பட்டு நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டனர். எதிரிகள் கூட்டாக சேர்ந்து அபகரித்த சொத்தானது சுமார் ரூ.4 கோடி மதிப்புள்ள 4,230 சதுர அடி கொண்ட இடமாகும்.



நீலகிரி மாவட்டத்தில், மகளிர் திட்டம் சார்பில், தோடர் பழங்குடியினர் இனத்தை சார்ந்த ரோஜா தோட்டம் மகளிர் சுய உதவிக்குழுவினரின் சிறுதானிய உணவகத்தினை, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி லட்சுமி பவ்யா தண்ணீரு இ.ஆ.ப., அவர்கள் திறந்து வைத்து பார்வையிட்டார்.

நீலகிரி மாவட்டம், உதகை பழங்குடியினர் பண்பாட்டு மையத்தில், நடைபெறும் 4வது புத்தகத் திருவிழாவின் எட்டாவது நாள் நிகழ்ச்சியில், உதகை செவிதிறன் குறையுடையோர் அரசு உயர்நிலைப்பள்ளி மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது.







நீலகிரி மாவட்டம், உதகை பழங்குடியினர் பண்பாட்டு மையத்தில், நடைபெறும் 4வது புத்தகத் திருவிழாவின் எட்டாவது நாள் நிகழ்ச்சியில், உதகை செவிதிறன் குறையுடையோர் அரசு உயர்நிலைப்பள்ளி மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது.






வருகின்ற *09.11.2025* அன்று தமிழ்நாடு சீருடைப்பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படவிருக்கும் *2025* ஆம் ஆண்டிற்கான இரண்டாம் நிலைக்காவலர், இரண்டாம் நிலைக் சிறைக்காவலர் , தீயணைப்பாளர் ஆகிய பதவிகளுக்கான எழுத்து தேர்வு நடைபெறவுள்ள நிலையில் *(01.11.2025)* மதுரை மாநகர காவல் ஆணையர் அலுவலகத்தில், மாநகர காவல் ஆணையர் முனைவர் திரு. ஜெ. லோகநாதன் இ.கா.ப., அவர்கள் தலைமையில், காவலர் தேர்வின் போது மேற்கொள்ளப்பட வேண்டிய தேர்வு கண்காணிப்பு பணிகள் மற்றும் பாதுகாப்பு பணிகள் தொடர்பான கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது. காவல் துணை ஆணையர் (தலைமையிடம் ) அவர்கள் உடனிருந்தார். இக்கூட்டத்தில் காவல்துறையினர் மற்றும் அமைச்சுப்பணியாளர்கள் கலந்து கொண்டனர்

---




திருப்பூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களின் உத்தரவின் படி அவிநாசி அனைத்து மகளிர் காவல்நிலைய உதவி ஆய்வாளர் தலைமையில் அவிநாசி பகுதியில் பொது மக்களுக்கு போக்சோ மற்றும் பெண் குழந்தைகள் மீதான குற்றங்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது..

# காவல்துறையில் ஊடகங்களை சந்திப்பதற்காக, புதிதாக ஊடகத் செய்தி தொடர்பு அதிகாரி நியமனம்



காவல்துறையில் ஊடகங்களை சந்திப்பதற்காக, புதிதாக ஊடகத் செய்தி தொடர்பு அதிகாரி என்ற பதவி உருவாக்கப்பட்டுள்ளது. ஊடகத் தொடர்பு அதிகாரியாக முத்தரசி ஐபிஎஸ் நியமனம்.

காவல்துறையில் புதிதாக ஊடக செய்தி தொடர்பு அதிகாரி என்று தற்போது உருவாக்கப்பட்டுள்ள இந்த பதவியால் ஊடகங்களுக்கு கட்டுப்பாடு விதிக்கப்படுமா? தமிழகம் முழுவதுமுள்ள செய்தியாளர்கள் அப்பகுதி காவல் நிலையங்களுக்கு சென்று செய்தி சேகரிப்பதில் நடைமுறை சிக்கல்கள் உருவாக வாய்ப்புள்ளதா? அதிகாரியின் பணி குறித்த விளக்கத்தை காவல்துறை தலைவர் அலுவலகம் சார்பில் வெளியிடப்படுமா?

---







திருச்சி மாவட்டம், மணப்பாறை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் வாகன சோதனையின்போது காவல்துறையினர் மறித்தும் நிற்காமல் சென்ற சந்தேகத்திற்கிடமான காரை மணப்பாறை போக்குவரத்து பிரிவு காவல்துறையினர் துரத்தி சென்று மறித்த போது அந்த காரில் இருந்த நான்கு நபர்களும் காரை விட்டுவிட்டு தப்பியோடிய நிலையில் காரை சோதனை செய்ததில் காரில் கடத்தி வரப்பட்ட 85 1/2 கிலோ கஞ்சா மற்றும் 5 போலி நம்பர் பிளேட்டுகள் கைப்பற்றப்பட்டது. மேலும், இவ்வழக்கில் தொடர்புடைய தப்பியோடிய நபர்களை கைது செய்ய திருச்சி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.செ.செல்வநாகரத்தினம், இ.கா.ப., அவர்களின் உத்தரவின் பேரில் தனிப்படை அமைக்கப்பட்டுள்ளது.





திருச்சி மாவட்டம், மணப்பாறை காவல்நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் சிறப்பான முறையில் வாகனத்தணிக்கை மேற்கொண்டு காரில் கடத்தி வரப்பட்ட 85 1/2 கிலோ கஞ்சாவை பிடித்து கொடுத்த மணப்பாறை போக்குவரத்துப் பிரிவு காவல் உதவி ஆய்வாளர் திரு. வெங்கடாச்சலம் மற்றும் இரண்டாம்நிலை காவலர் (PC 2534) திரு.தினேஷ்குமார் ஆகியோருக்கு திருச்சி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.செ.செல்வநாகரத்தினம், இ.கா.ப., அவர்கள் நற்பணிச் சான்றிதழ் மற்றும் வெகுமதி வழங்கி பாராட்டினார்.



# தமிழகத்தில் 218 விஏஓக்கள் நேரடி நியமனத்துக்கு இடைக்கால தடை

## உயர் நீதிமன்றம் உத்தரவு

தமிழகத்தில் 218 கிராம நிர்வாக அலுவலர் காலிப்பணியிடங்களை நேரடி நியமனம் மூலம் நிரப்ப டிஎன்பிஎஸ்சி—க்கு இடைக்கால தடை விதித்து உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தமிழக கிராம நிர்வாக அலுவலர் சங்க பொதுச்செயலாளர் அருள்ராஜ் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் அகமது ஃபயஸ் ஆகியோர் உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனுவில், ‘தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களில் காலியாக உள்ள 218 கிராம நிர்வாக அலுவலர் பணியிடங்களை நிரப்ப செப்.1 முதல் 15—ம் தேதி வரை ஆன்லைன் மூலம் விண்ணப்பிக்க மே மாதம் அறிவிப்பு வெளியிடப்பட்டது. மாவட்ட அளவில் கிராம நிர்வாக அலுவலர்களுக்கு பணியிட மாறுதல் வழங்கிய பிறகு காலியுள்ள கிராம நிர்வாக அலுவலர் காலிப்பணியிடங்களை நேரடி நியமனம் மூலம் நிரப்பலாம்.

ஏற்கெனவே கிராம நிர்வாக அலுவலர்களின் முதுநிலை பட்டியலை கருத்தில் கொள்ளாமல், பணியில் சேர்ந்த தேதி அடிப்படையாகக் கொண்டு மாவட்ட மாறுதல் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படுவது தவறு எனக் கூறி உயர் நீதிமன்றம் தடை விதித்துள்ளது. இந்தச் சூழலில் 218 காலிப்பணியிடங்களை நேரடியாக நிரப்ப முடிவு செய்து தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்துக்கு அரசு பட்டியலை அனுப்பியுள்ளது. இதனால் இடமாறுதலுக்காக பல ஆண்டுகளாக காத்திருப்பவர்களின் வாய்ப்பு பறிக்கப்பட்டுள்ளது.

218 கிராம நிர்வாக அலுவலர் பணியிடங்களை மாவட்ட பணியிட மாறுதல் மூலம் நிரப்பாமல் நேரடி நியமனம் மூலம் நிரப்ப டிஎன்பிஎஸ்சி—க்கு இடைக்கால தடை விதித்தும், தகுதி வாய்ந்த கிராம நிர்வாக அலுவலர்கள் இடமாறுதல் கோரிய மனுக்களை பரிசீலித்து அவர்களுக்கு உரிய இடங்களில் இடமாறுதல் வழங்கிய பிறகு நேரடி முறையில் கிராம நிர்வாக அலுவலர் பணியிடங்களை நிரப்பவும் உத்தரவிட வேண்டும்’ என்று மனுவில் கூறப்பட்டிருந்தது.

இந்த மனுவை நீதிபதி குமரேஷ்பாபு விசாரித்தார். பின்னர் நீதிபதி, மாவட்ட பணியிட மாறுதல் நடத்தாமல் கிராம நிர்வாக அலுவலர் பணியிடங்களை நேரடி முறையில் டிஎன்பிஎஸ்சி நிரப்ப தடை விதிக்கப்படுகிறது. மனு தொடர்பாக வருவாய் துறை ஆணையர், டிஎன்பிஎஸ்பி தலைவர் பதில் மனு தாக்கல் செய்ய உத்தரவிட்டு விசாரணையை நவ.14—க்கு தள்ளிவைத்தார்.



தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் உட்கோட்டம் பட்டீஸ்வரம் காவல் சரகத்திற்குட்பட்ட தேனாம்படுகை, VGP நகர் பகுதியில் போதைப்பொருட்கள் சட்ட விரோதமாக குடோனில் பதுக்கிவைக்கப்பட்டு கும்பகோணம் சுற்றுப்புற பகுதிகளில் வாகனம் மூலம் கொண்டு சேர்த்து விற்பனை செய்து வந்த குற்றவாளியான கும்பகோணம் செக்கடித் தெருவைச் சேர்ந்த வினோத் (வயது–34) என்பவரை கைது செய்து அவரிடமிருந்த 800 கிலோ குட்கா, 3 இருசக்கர வாகனங்கள் மற்றும் 3 நான்கு சக்கர வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டு சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டார்.

---




## காணாமல் போன மொபைல் போன்களை துரிதமாக கண்டுபிடித்து தரும் அதிராம்பட்டினம் காவல்துறை அதிகாரிகள்

தஞ்சை மாவட்டம் அதிராம்பட்டினம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதிகளில் காணாமல் போன மொபைல் போன்களை புகாரின் அடிப்படையில் துரிதமாக கண்டுபிடித்து தரும் அதிராம்பட்டினம் காவல்துறை அதிகாரிகள்.

அதிரை காவல் ஆய்வாளர் முருகேசன் உத்தரவின் பேரிலும் உதவி ஆய்வாளர் மஹாராஜா மேற்பார்வையிலும் மல்லிப்பட்டினத்தை சேர்ந்த காவலர் பிலால் அவர்களின் சீரிய முயற்சிலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

தொலைத்தவர்கள் செல்போனை திரும்ப பெற்றுக்கொண்டனர். திரும்ப பெறும் காவல்துறை அதிகாரிகளுக்கு நன்றி தெரிவித்தனர். மேலும் அதிரை காவல்துறை அதிகாரிகளின் இந்த செயலை பொதுமக்கள் பாராட்டி வருகின்றனர்.




## ஓமந்தூரார் பன்னோக்கு மருத்துவமனையில்

## புதிய பரிசோதனை வசதி

# இதய அடைப்பை 2 நிமிடத்தில் அறியலாம்

சென்னை அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனையில் முழு உடல் பரிசோதனை திட்டத்தில், இதய அடைப்பு குறித்து 2 நிமிடத்தில் தெரிந்து கொள்ளும் புதிய வசதி செயல்பாட்டுக்கு வந்துள்ளளது.

இது தொடர்பாக சென்னை அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனையின் ஒருங்கிணைப்பு அதிகாரி ஆனந்த்குமார் கூறியதாவது: ஓமந்தூரார் வளாகத்தில் உள்ள இந்த பன்னோக்கு மருத்துவமனையில் முழு உடல் பரிசோதனை திட்டம் 4 விதமான கட்டணத்தில் மேற்கொள்ளப்படுகிறது. இதில், 'பிளாட்டினம் பிளஸ்' திட்டம் ரூ.4,000 கட்டணம் கொண்டது.

இதில், உடற்பயிற்சி செய்யும்போது இதயத்தின் செயல்பாட்டை தெரிந்துகொள்ள, 'டிரெட்மில்' என்ற பரிசோதனை செய்யப்படுகிறது. இந்த சோதனையை செய்துகொள்ள பலர் முன்வந்தாலும், உயர் ரத்த அழுத்தம் போன்ற காரணங்களால் அனைவருக்கும் செய்ய முடிவதில்லை. இதனால், இசிஜி, எக்கோ ஆகியவற்றுடன் இதய அடைப்பை 2 நிமிடத்தில் தெரிந்து கொள்ளும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அதன்படி, 'சிடி கால்சியம் ஸ்கோரிங்' என்ற பரிசோதனை முறையில், ரத்தத்தை எடுத்துச் செல்லும் ரத்த நாளங்களில் அடைப்பு இருக்கிறதா என்று கண்டறிந்து, எங்கு அடைப்பு இருக்கிறது, எந்த அளவுக்கு கொழுப்பு படிந்துள்ளது என்பதை துல்லியமாக தெரிந்து கொள்ளலாம். தனியார் மையங்களில் இந்த ஒரு பரிசோதனைக்கு மட்டுமே ரூ.4,000 வரை செலவாகும்.

முழு உடல் பரிசோதனைக்கான பிளாட்டினம் பிளஸ் திட்டத்தில், 'டிரெட்மில்' சோதனைக்கு பதிலாக, இந்த பரிசோதனையை செய்து கொள்ளலாம். இதில் ஊசி, மருந்து இல்லாமல் எளிய முறையில், 2 நிமிடத்தில் பரிசோதனை முடிவுகள் கிடைக்கும். அதேநேரம், சுயவிருப்பம் இருந்தாலும், மருத்துவமனையில் உள்ள இதய மருத்துவர்கள் பரிந்துரை செய்தால் மட்டுமே இந்த பரிசோதனை செய்யப்படும் என்று அவர் கூறினார்.




# கீழ்பாக்கம் அரசு மருத்துவமனையில் இறப்புச் சான்றிதழ் பெயர் தவறுகள்...

## பொதுமக்கள் துயரம், அலுவலர்கள் அலட்சியம்!

சென்னையின் கீழ்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை (KMC)—யில் சமீபத்தில் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தும் ஒரு பிரச்சனை எழுந்துள்ளது. இறப்புச் சான்றிதழ் பதிவு செய்யும் போது பெயர் மற்றும் விவரங்களில் அடிக்கடி தவறுகள் இடம்பெறுவதாக பொதுமக்கள் குற்றச்சாட்டு தெரிவித்து வருகின்றனர்.

இறப்புச் சான்றிதழ் என்பது சட்டரீதியான முக்கிய ஆவணம். ஒரு குடும்பம் தங்கள் அன்பு உறவினரை இழந்த துயரத்தில் இருக்கும் வேளையில், அச்சான்றிதழ் பெறுவதில் கூட சிக்கல்கள் உருவாகுவது அவர்களுக்கு இன்னும் வேதனையை அளிக்கிறது. ஆனால், சமீபகாலமாக KMC—யில் வழங்கப்படும் பல இறப்புச் சான்றிதழ்களில் பெயர், வயது, முகவரி போன்ற அடிப்படை விவரங்களில் தவறுகள் நிகழ்வது பெரும் சர்ச்சையாகி வருகிறது.

மக்கள் தெரிவிப்பதாவது – அவர்கள் ஆதார் அட்டை, ரேஷன் கார்டு, மருத்துவ பதிவுகள் போன்ற அனைத்து சான்றிதழ்களையும் சரியாக சமர்ப்பித்தபோதும், இறுதியில் வழங்கப்படும் இறப்புச் சான்றிதழில் பெயர்கள் தவறாக இடம்பெறுகின்றன. சில நேரங்களில் எழுத்துப்பிழை, சில நேரங்களில் முழுப் பெயர் மாறி வருவது போல வழக்குகள் பதிவாகியுள்ளன. இத்தகைய ஒரு தவறை திருத்துவதற்கு, குடும்பத்தினர் மீண்டும் மீண்டும் மருத்துவமனை, மாநகராட்சி அலுவலகம், மற்றும் பதிவுத் துறை ஆகியவற்றைச் சுற்ற வேண்டிய நிலை உருவாகி வருகிறது. இது மூன்று மாதங்களுக்கும் மேலாக நீளும் “திருத்தப் பயணம்” என மக்கள் கசப்புடன் விவரிக்கின்றனர்.

இங்கு கேள்வி எழுகிறது – KMC—யில் பணிபுரியும் கணினி பதிவு பிரிவில் உள்ள ஊழியர்கள் போதுமான பயிற்சி பெற்றவர்களா? அடிப்படையில் அவர்களின் பணியானது ஆவணங்களில் உள்ள விவரங்களை துல்லியமாக டைப் செய்வதே. அதிலும் பெயர், வயது போன்ற முக்கியமான தகவல்களைச் சரியாக பதிவுசெய்வது மிகச்சிறிய வேலை. அதைப் பிழையின்றி செய்ய முடியாமல் போவது திறனின்மையா அல்லது பொறுப்பின்மையா?

முன்பு கைஎழுத்து பதிவுகள் இருந்தபோது, பிழைகள் குறைவாக இருந்ததாக சில பழைய பணியாளர்கள் நினைவூட்டுகின்றனர். ஆனால் கணினி முறைமையில் மாறிய பின், “டேட்டா என்ட்ரி” எனும் பெயரில் பல அலட்சியமான தவறுகள் நிகழ்கின்றன.

இறப்புச் சான்றிதழ் தவறாக வந்தால், அதன் விளைவுகள் பல. அரசுத் திட்டங்கள், பஞ்சாயத்து நில உரிமைகள், வங்கி சொத்து

மாற்றங்கள் போன்றவற்றில் பெரும் தடை ஏற்படுகிறது. குடும்பத்தினர் பல இடங்களில் மீண்டும் மீண்டும் ஆவணங்களை சரிசெய்ய வேண்டியதாகிறது.

ஒரு பாதிக்கப்பட்ட குடும்பம் கூறியது:

“மூன்று மாதம் கழித்து தான் திருத்தப்பட்ட சான்றிதழ் கிடைத்தது. இத்தனை நாள் எதற்காக நாம் சுமை சுமக்க வேண்டும்? தவறு செய்தது அவர்கள்தான், தண்டனை அனுபவிப்பது நாமா?”

இத்தகைய நிலைமைக்கு காரணமாகப் பணியாளர்களின் குறைந்த பொறுப்புணர்வு மற்றும் மேலதிகாரிகளின் கவனக்குறைவு என மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

இந்தப் பிரச்சனையை மீண்டும் மீண்டும் மக்கள் முன்னிறுத்தியும், இதுவரை KMC அல்லது சுகாதாரத் துறை அதிகாரிகள் இதற்கான ஒரு தெளிவான தீர்வு அறிவிக்கவில்லை. ஒரு சிறிய அலட்சியம் ஒரு குடும்பத்தின் வாழ்வை மாதக்கணக்கில் சிக்கலில் ஆழ்த்துகிறது என்ற உண்மை அதிகாரிகளால் உணரப்பட வேண்டிய நேரம் இது.

பொது நலனுக்காக இயங்கும் மருத்துவமனையில், மக்களின் ஆவணங்களையே துல்லியமாக பதிவு செய்ய முடியாமல் போவது வருத்தத்திற்குரியது. KMC போன்ற பிரபல நிறுவனம் இப்படிப்பட்ட குற்றச்சாட்டில் சிக்குவது அதன் மதிப்பையும் நம்பிக்கையையும் பாதிக்கும்.

மக்களின் கேள்வி தெளிவானது – “பதிவு அலுவலகம் பிழை செய்தால் அதன் விலையை நாமே ஏன் செலுத்த வேண்டும்?”

பயிற்சி, பொறுப்புணர்வு, மற்றும் கணினி பணிகளில் துல்லியம் மீண்டும் உருவாக வேண்டும். இறப்புச் சான்றிதழ் என்பது ஒரு குடும்பத்தின் சட்டப் பூர்வமான அடையாள ஆவணம் — அதில் பிழை இருப்பது ஒருவரின் அடையாளத்தை பறிக்கும் தவறு.

இந்த பிரச்சனைக்கு தீர்வு எப்போது வரும்? நிர்வாகம் விழித்து உணருமா? காத்திருந்து பார்ப்போம்...





**புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் எதிர்வரும் 10.11.2025 அன்று புதுக்கோட்டை மாவட்டத்திற்கு வருகை புரிந்து புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும், முடிவுற்ற திட்டப்பணிகளை திறந்து வைத்தும், பயனாளிகளுக்கு அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்பிக்க உள்ளதை தொடர்ந்து மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னேற்பாடு பணிகள் குறித்து அனைத்துத்துறை அலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டம் மாண்புமிகு இயற்கை வளங்கள் துறை அமைச்சர் திரு.எஸ்.ரகுபதி அவர்கள் முன்னிலையில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (03.11.2025) நடைபெற்றது. உடன், மாநகராட்சி மேயர் திருமதி.திலகவதி செந்தில் அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மரு. வை.முத்துராஜா அவர்கள் (புதுக்கோட்டை), திரு.எம்.சின்னத்துரை அவர்கள் (கந்தர்வக்கோட்டை), மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ.கோ.ராஜராஜன் அவர்கள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி.பா.ஜெயசுதா, தனி மாவட்ட வருவாய் அலுவலர் (காவிரி–வைகை–குண்டாறு) திருமதி.ஆர். ரம்யாதேவி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.எஸ்.திருமால், முன்னாள் அரசு வழக்கறிஞர் திரு.கே.கே.செல்லப்பாண்டியன், துணை மேயர் திரு.எம்.லியாகத் அலி அவர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளனர்.**




# புதுக்கோட்டையில் 6- காவல் நிலையத்தில் நீதிமன்ற பிடிவாரண்ட்!..40க்கும் மேற்பட்ட வழக்கு..

## பத்துக்கு மேற்பட்ட வழக்கில் தலைமறைவாகி இருந்த கொள்ளையனை தட்டி தூக்கிய அறந்தாங்கி காவல்துறை

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கியில் தீபாவளிக்கு முதல் நாள் டைலர் கடையின் பூட்டை உடைத்து ஒன்றரை லட்சம் பணத்தை திருடி சென்ற சம்பவம் அறந்தாங்கி வர்த்தக சங்கம் மற்றும் பொது மக்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி இருந்தது.

இந்த நிலையில் திருட்டு சம்பவம் குறித்து அறந்தாங்கி வர்த்தக சங்கத்தினர் சிசிடிவி காட்சிகளை வெளியிட்டனர்.

அதன் அடிப்படையில் மாவட்ட கண்காணிப்பாளர் அபிஷேக் குப்தா உத்தரவின் பேரில் அறந்தாங்கி காவல் துணை கண்காணிப்பாளர் ரவிக்குமார் மற்றும் காவல் ஆய்வாளர் செந்தூரப் பாண்டியன் ஆகியோர் தனிப்பிரிவு காவலர்கள் சிசிடிவி காட்சிகளின் அடிப்படையில் திருடனை தேடி வந்தனர்.

இந்த நிலையில் திருடன் கேரளா மாநிலம் பாலக்காடு பகுதியில் தலைமறைவாகி இருப்பதாக காவல்துறையினருக்கு தகவல் கிடைத்த தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்திற்கு சென்ற தனிப்படை காவல்துறையினர் விருதுநகர் மாவட்டம் அல்லம்பட்டியை சேர்ந்த சுரேஷ் (42) என்ற கொள்ளையனை கேரளா மாநிலம் பாலக்காட்டில் வைத்து கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட திருடனை தற்பொழுது அறந்தாங்கிக்கு அழைத்து வந்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

கொள்ளையன் சுரேகைஷ விசாரணை செய்ததில் தமிழ்நாடு முழுவதும் பல்வேறு காவல் நிலையங்களில் சுமார் 40 க்கும் மேற்பட்ட திருட்டு வழக்குகளும் ஆறு காவல் நிலையக்களில் நீதிமன்ற பிடிவாரண்டும் 10 —க்கும் மேற்பட்ட வழக்குகளில் தலைமறைவாகவும் இருந்து வந்துள்ளார் என்பது தெரியவந்துள்ளது.

பல காவல் நிலையத்திற்கு தண்ணி காட்டி வந்த திருடனை புதுக்கோட்டை மாவட்ட காவல் துறையினர் தட்டி தூக்கியதால் அறந்தாங்கி வர்த்தக சங்கத்தினர் மற்றும் பொதுமக்கள் காவல்துறையினரை பாராட்டி வருகின்றனர் மேலும் மாவட்ட கண்காணிப்பாளர் மூலம் தனிப்படை காவலர்களுக்கு நற்சான்றிதழ் வழங்கினார்.

## 10, 12 ஆம் வகுப்பு பொதுத்தேர்வு: முதல்முறையாக கால்குலேட்டர் அனுமதி

சென்னை கோட்டூர்புரத்தில் 10,12ம் வகுப்புகளுக்கான பொதுத்தேர்வு தேதி அட்டவணையை பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் மகேஷ் வெளியிட்டார். அப்போது, 11ம் வகுப்பு அரியர் தேர்வுகளுக்கான தேதியும் அறிவிக்கப்பட்டது.

12ம் வகுப்பு பொதுத்தேர்வு மார்ச் 2ம் தேதி தொடங்கி மார்ச் 26ம் தேதி நிறைவடைய உள்ளது. 12ம் வகுப்பு பொதுத்தேர்வு முடிவுகள் மே 8ம் தேதி வெளியிடப்படும். இந்த ஆண்டு பன்னிரண்டாம் வகுப்பு மாணவர்கள் 8.7 லட்சம் பேர் பொதுதேர்வு எழுத உள்ளனர். செய்முறை தேர்வு பிப்ரவரி 9ம் தேதி தொடங்கி 16ம் தேதி வரை நடைபெற உள்ளது.

10ம் வகுப்பு பொதுத்தேர்வு மார்ச் 11ம் தேதி தொடங்கி ஏப்ரல் 06ம் தேதி வரை நடைபெற உள்ளது. பத்தாம் வகுப்பு மாணவர்களுக்கு மே 5ம் தேதி தேர்வு முடிவுகள் வெளியாகும்.

இது குறித்து நிருபர்கள் சந்திப்பில் அமைச்சர் மகேஷ் கூறியதாவது:

“மாணவர்கள் நீண்ட கால கோரிக்கை என்ற அடிப்படையில் இந்த ஆண்டு கணக்கு பதிவியல் தேர்வில் கால்குலேட்டருக்கு அனுமதி வழங்கப்பட்டு உள்ளது. மாணவர்கள் பதற்றம் இல்லாமல், உற்சாகத்துடன் பொதுத்தேர்வுகளை எழுத வேண்டும். இவ்வாறு அமைச்சர் மகேஷ் தெரிவித்தார்.




## நேர்மையுடன் செயல்பட்ட பெண்ணுக்கு காவல்துறை அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் பாராட்டு!

சென்னை திருவல்லிக்கேணியில் ஐஸ் ஹவுஸ் பகுதியில் கலைவாணன் என்பவர் மனைவியை பிரசவத்திற்காக மருத்துவமனையில் அனுமதித்துவிட்டு ஆதார் அட்டையை நகல் எடுக்க ஜெராக்ஸ் கடைக்குச் சென்றபோது 5 சவரன் தாலிக் கொடியை தவற விட்டு சென்று விட்டார்.

ஜெராக்ஸ் கடையில் வாடிக்கையாளர் கலைவாணன் தவறவிட்டுச் சென்ற 5 சவரன் தாலியை ராயப்பேட்டை உதவி காவல் ஆணையர் அலுவலகத்தில் உதவி காவல் ஆணையர் N.இளங்கோவன், முன்னிலையில் உரிமையாளரிடம் தாலி கொடியை ஒப்படைத்தார்.

இதில் D3 குற்றப்பிரிவு காவல் ஆய்வாளர் சிவராசன், D1 உதவி காவல் ஆய்வாளர் ஆகியோர் உடன் இருந்தனர் .

மனிதாபத்துடனும் நேர்மையுடன் செயல்பட்ட ஜெராக்ஸ் கடை உரிமையாளரின் மனைவிக்கு காவல்துறை அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் சமூக ஆர்வலர்கள் பாராட்டு தெரிவித்து வருகின்றனர்.

## அரசு வேலை வாங்கித்தருவதாக கூறி

# சேலம் போக்குவரத்து பிஆர்ஓ சண்முகசுந்தரம் பல கோடி ரூபாய் மோசடி...

தென்காசி மாவட்டத்தில் முன்னாள் மக்கள் தொடர்பு அலுவலராக (PRO) பணியாற்றிய சண்முகசுந்தரம், "அரசு நிரந்தர வேலை வாங்கித் தருவேன்" என்ற பெயரில் பொதுமக்களிடம் கோடிக்கணக்கில் பணம் வசூலித்திருப்பது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

### ஏமாற்றப்பட்ட தொகை – பல கோடிக்கும் மேல்!

*ஒவ்வொருவரிடமும் ₹4 லட்சம் முதல் ₹20 லட்சம் வரை வசூல்*

*வேலைக்காக வாழ்நாள் சேமிப்பையே ஒப்படைத்த பல குடும்பங்கள் பாதிப்பு*

*"சில மாதங்களில் நியமன ஆணை வரும்" என்ற பெயரில் ஏமாற்று வேலை*

### போலி வேலை நியமனங்கள்

*ஓஏ, டிரைவர், டேட்டா என்ட்ரி ஆபரேட்டர் போன்ற தற்காலிக வேலைகளில் சிலரை அமர்த்தினார்*

*சம்பளமும் அரசு தருவதாகச் சொல்லி, சில மாதங்கள் தனது கையிலிருந்து கொடுத்தார்*

*பின்னர் அரசு பட்டியலில் பெயரே இல்லை என்பது வெளிச்சம்*

### காணாமல் போன PRO

*கடந்த 7 மாதங்களாக தென்காசியில் காணவில்லை*

*தற்போது சென்னையில் தங்கி வருவதாக தகவல் – ஆனால் உறுதியான தகவல் இல்லை*

*இவர் திருச்சி, மதுரை உள்ளிட்ட இடங்களில் "மாரி மாரி" தங்கி வருவதாகவும் தகவல்*

*இவருக்குப் பதிலாக புதிய PRO இன்னும் நியமிக்கப்படவில்லை*



### போலீஸ் நடவடிக்கை எடுக்க தயக்கம் ஏன்?

*ஏற்கனவே தென்காசியில் பணிபுரிந்த போது, பொது கலெக்டர் கையொப்பத்தை போலியாக போட்ட சம்பவத்தில் நடவடிக்கை எடுத்து suspend செய்யப்பட்டவர்.*

*சுமார் 5 மாதங்கள் பணியில்லாமல் இருந்தவர், கடந்த ஜூலை மாதம் சேலம் போக்குவரத்து துறையில் சேர்ந்தார்.*

*பின்னர் மருத்துவ விடுப்பில் சென்று, இப்போது மதுரை & திருச்சியில் தங்கி வருவதாக தகவல்.*

*மதுரையில் உள்ள அவரது வீட்டில் ஏமாந்தவர்கள் விசாரித்தபோது, "அவரைத் தேடி தினமும் பலர் வருவதால் அவர் வீட்டுக்கே வருவதில்லை, ஹோட்டல்களில் தங்கி வருகின்றார்" என்று அவரது மனைவி கூறியதாக தகவல்.*

### மக்கள் புகார்கள் – ஆனால் நடவடிக்கை இல்லை!

*பொதுமக்கள் புகார் அளித்த இடங்கள்:*

தென்காசி காவல் நிலையம்

சென்னை கோயம்பேடு

காவல் நிலையம்

சேலம் கலெக்டர் அலுவலகம்

தென்காசி கலெக்டர் அலுவலகம்

தென்காசி DSP அலுவலகம்

இதுவரை சண்முகசுந்தரத்தின் மீது அதிகாரப்பூர்வ நடவடிக்கை எதுவும் இல்லை!

### பொதுமக்களின் குரல்

“அவரது பெயரையும் பதவியையும் நம்பி பணம் கொடுத்தோம். எங்கள் சேமிப்பு, கடன், தங்கம் எல்லாம் போய்விட்டது.” – ஏமாந்தவர்.

“அரசு தரப்பில் ஏன் இன்னும் நடவடிக்கை எடுக்கவில்லை? இவரை யார் காப்பாற்றுகிறார்கள்?” – மக்கள் கேள்வி.

### அரசியல் & உறவினர் ஆதரவு?

சண்முகசுந்தரத்தின் அண்ணன் மகன் கார்த்தி, சென்னை முதல்வர் அலுவலகத்தில் பணிபுரிவதாக சொல்லி வருகிறார்.

“அவரின் மூலம் வேலை வாங்கித் தருவேன்” எனக் கூறி பலரை சென்னைக்கு அழைத்து சென்று, கார்த்தியுடன் சந்திக்க வைத்தும் ஏமாற்றம்

சில வழக்கறிஞர்கள் மற்றும் அரசியல் முக்கியஸ்தர்கள் இவருக்கு ஆதரவாக இருப்பதாக சந்தேகம்

### ஏமாந்தவர்களுக்கு மிரட்டல்!

“என்னை தொந்தரவு செய்தால், பணம் கொடுத்தவர்மீதே FIR போடுவேன்” என்று மிரட்டல் விடுக்கிறார்.

புகார் அளித்தவர்களுக்கு “பணம் திருப்பித் தர தாமதம் ஆகும்” என போலீஸ் ஸ்டேஷனில் எவ்வளவு time வேணும்னாலும் வாங்குவேன் என்று கூறி வருகிறார்.

ஏமாந்தவர்கள் இப்போது “எப்படி எங்கள் பணத்தை மீட்டெடுப்பது?” என்று குழப்பத்தில் தவிக்கின்றனர்.

### மக்கள் கோரிக்கை

“சண்முகசுந்தரத்தை உடனடியாக கைது செய்து, எங்களிடமிருந்து பறிக்கப்பட்ட பணத்தை மீட்டுத் தர வேண்டும்!” – ஏமாந்தவர்கள் கோரிக்கை

●




## குளித்தலையில்... “ஏன் இந்த நிலை”

கடந்த மே திங்கள் 30/2025 அன்று கொடுக்கப்பட்ட மனுவின் தாக்கம்... "சார் ஆட்சியரின்" முன்னிலையில் நேரடி விசாரனையின் பேரில் கொடுக்கப்பட்ட மனுவும், இன்றைய நாள் வரை அவரது பார்வையில் இயங்கி வரும் வட்டாட்சியரின் பார்வை மட்டும் படாமல், எங்கே ஒரு மூலையில் கேட்பாரற்று முடங்கி கிடப்பதால் தானோ, என்னவோ... இன்றும், ஊர் ஊராகவும், வீடு வீடாக சென்று மக்களின் முதல்வர் என்றும், "சிறப்பு முகாம்" போட வேண்டிய நிலையாகி போனதோ... ஆட்சிக்கு கலங்கம் விளைவிக்கும் மெத்தன போக்கான அதிகாரிகளின் அலட்சியமும், இன்றைய சார் ஆட்சியருக்கும் கலங்கமே...

## மடிப்பாக்கம் பகுதியில் தொழில் தொடங்குவதற்கு

# ரூ.1 கோடி கடன் பெற்று மோசடி செய்த உறவினரான தந்தை-மகன் கைது.






சென்னை, மடிப்பாக்கம், ராம் நகரில் வசித்து வரும் சுகந்தி, வ/57, என்பவர் 2019ம் ஆண்டு இவரது கணவர் ரமேஷ்குமாரின் அக்கா சரளாதேவி, அவரது கணவர் குணசேகர் மற்றும் இவர்களது மகன் விஜய் ஆகியோர், தனியார் விடுதி நடத்துவதற்காக கணவரிடம் ரூ.1 கோடி கடனாக தரும்படியும், 2 வருடத்திற்குள் வட்டியுடன் வங்கியில் செலுத்தி விடுவதாகவும் கூறியதன்பேரில், சுகந்தி தங்களுக்கு சொந்தமாக திருவான்மியூரில் உள்ள வீட்டை விற்று அதில் வந்த பணத்தில் ரூ.1 கோடியை வங்கி மூலமாகவும், ரொக்கமாகவும் என சரளாதேவி குடும்பத்தினரிடம் கொடுத்ததாகவும், சில மாதங்கள் மட்டும் வங்கியில் மாத கடன் சந்தா ரூ75,000/— செலுத்தி, பின்னர் 2020ம் ஆண்டு கொரோனா எனக்கூறி 2023ம் ஆண்டு வரை மாதம் ரூ.40,000/— என செலுத்தி, அதன் பின்னர் மீதத் தொகை ரூ.98,30,000/— பணத்தை செலுத்தாமல் ஏமாற்றி வந்தவர்களை பணம் செலுத்த கேட்டபோது, சரளாதேவி, குணசேகர் மற்றும் மகன் விஜய் ஆகியோர் தகாத வார்த்தைகளால் பேசி பணம் கொடுக்க முடியாது என மிரட்டி அனுப்பியதாகவும், மேற்படி மூவர் மீதும் நடவடிக்கை எடுத்து, எங்களுக்கு தர வேண்டிய பணம் ரூ.98,30,000/— பணத்தை பெற்று தருமாறும், சுகந்தி என்பவர் S—7 மடிப்பாக்கம் காவல் நிலைய குற்றப்பிரிவில் புகார் கொடுத்ததின்பேரில், மோசடி உள்ளிட்ட பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.

S—7 மடிப்பாக்கம் காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, இவ்வழக்கில் தொடர்புடைய எதிரிகள் குணசேகர், வ/67, 3வது மெயின் ரோடு, பள்ளிக்கரணை, சென்னை மற்றும் இவரது மகன் விஜய், வ/36 ஆகிய இருவரை (01.11.2025) கைது செய்தனர். கைது செய்யப்பட்ட எதிரிகள் இருவரும் விசாரணைக்குப் பின்னர் (01.11.2025) நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில்அடைக்கப்பட்டனர்.

---



புதுக்கோட்டை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. அபிஷேக் குப்தா இ.கா.ப., அவர்கள் புதுக்கோட்டை மாவட்ட அனைத்து காவல் அதிகாரிகளுடன் சட்டம் ஒழுங்கு பணி தொடர்பான மாதாந்திர குற்ற ஆய்வுக் கூட்டம் (Monthly Crime Review Meeting) நடத்தி பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார். மேலும் குற்ற வழக்குகளில் சிறப்பாக பணிபுரிந்த காவல் அதிகாரிகள் மற்றும் ஆளிநர்கள் மொத்தம் 11 நபர்களை (03.11.2025) நேரடியாக வரவழைத்து பாராட்டி நற்சான்றிதழ் வழங்கினார்கள்.

# சதய விழா: ராஜராஜ சோழன் சிலைக்கு தஞ்சை ஆட்சியர் மாலை அணிவித்து மரியாதை!



மாமன்னன் இராஜராஜ சோழனின் 1,040 ஆவது சதய விழாவை முன்னிட்டு, சோழன் சிலைக்கு அரசு சார்பில் மாவட்ட ஆட்சியர் பிரியங்கா பங்கஜம், எம்.பி முரசொலி, மேயர் ராமநாதன் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

உலகப் புகழ்பெற்ற தஞ்சை பெரிய கோயிலை கட்டிய மாமன்னன் ராஜராஜ சோழன் முடிசூட்டிய நாளை அவன் பிறந்த விண்மீனாகிய ஐப்பசி சதய நாளன்று சதய விழாவாகக் கொண்டாடப்படுகிறது.

நிகழாண்டு ராஜராஜ சோழனின் 1040 ஆவது சதய விழா பெரிய கோயிலில் மங்கள இசை, களிமேடு அப்பர் பேரவையின் திருமுறை அரங்கத்துடன் வெள்ளிக்கிழமை காலை தொடங்கியது. பின்னர், மாவட்ட ஆட்சியர் பா. பிரியங்கா பங்கஜம் தலைமையில் நடைபெற்ற தொடக்க விழாவில் முன்னாள் எம்எல்ஏ எம். ராமச்சந்திரன் தொடக்கவுரையாற்றினார்.

மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் இரா. ராஜாராம், சதய விழாக் குழுத் தலைவர் து. செல்வம், அரண்மனை தேவஸ்தான பரம்பரை அறங்காவலர் சி. பாபாஜி ராஜா போன்ஸ்லே, இந்து சமய அறநிலையத் துறை இணை ஆணையர் மு. ஜோதிலட்சுமி, மண்டல கலை பண்பாட்டு மைய உதவி இயக்குநர் ம. ராஜாராமன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். மேலும், அரண்மனை வளாகத்திலிருந்து நாட்டுப்புற கலைஞர்கள் ஊர்வலமாகப் புறப்பட்டு, பெரிய கோயிலுக்கு வந்தனர். பின்னர், ஏறத்தாழ 400 கலைஞர்கள் பங்கேற்ற பரதநாட்டிய புஷ்பாஞ்சலி உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

இதனையடுத்து இரண்டாம் நாளான சனிக்கிழமை சதய நட்சத்திர நாளான நவம்பர் 1 காலை 7.20 மணிக்கு மாமன்னன் ராஜராஜ சோழன் சிலைக்கு மாலை அணிவித்தல் நிகழ்ச்சி நடைபெற்றது. பெரிய கோயிலில் இருந்து யானை மீது திருமுறைகள் எடுத்து வரப்பட்டது. அதனைத் தொடர்ந்து அரசு சார்பில் மாவட்ட ஆட்சியர் பிரியங்கா பங்கஜம், எம்.பி முரசொலி, மேயர் ராமநாதன் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

பின்னர் திருமுறை வீதி உலா நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து பெருவுடையார் மஞ்சள் சந்தனம், பெரியநாயகிக்கு மஞ்சள் சந்தனம், பால், தயிர் உள்ளிட்ட 48 வகையான திரவியங்களால் பேரபிஷேகம் தருமபுரம் 27 ஆவது ஆதீனம் ஸ்ரீல ஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரியார் சுவாமிகள் தலைமையில் நடைபெற்றது. பிற்பகலில் பெருந்தீப வழிபாடு, பரதம் உள்ளிட்ட கலை நிகழ்ச்சிகள் நடைபெறுகிறது.

இரவு 7 மணிக்கு நடைபெறும் விருது வழங்கும் விழாவில் உச்ச நீதிமன்ற நீதிபதி ஆர். மகாதேவன் சிறப்புரையாற்றுகிறார். குன்றக்குடி ஆதீனம் தவத்திரு. பொன்னம்பல அடிகளார் விருதுகள் வழங்கி அருளுரையாற்றுகிறார். தொடர்ந்து பட்டிமன்றம், நாட்டுப்புற இன்னிசை நிகழ்ச்சி நடைபெறவுள்ளன.

இதையொட்டி தஞ்சாவூர் மாவட்டத்தில் சனிக்கிழமை (நவ.1) உள்ளூர் விடுமுறை என மாவட்ட நிர்வாகம் அறிவித்துள்ளது.




# நாறி போகாமல் இருந்தாலே., நாடு போற்றப்படுமே... “பட்டுக்கோட்டை நகராட்சி”

## மழைக்காலத்தில் நோய் பரவல் அபாயம்... நடவடிக்கை எடுப்பாரா நகராட்சி ஆணையர்?

தஞ்சாவூர் மாவட்டத்தின் முக்கிய நகரங்களில் ஒன்றான பட்டுக்கோட்டை, கல்வி, வணிகம், விவசாயம், போக்குவரத்து ஆகிய துறைகளில் வளர்ச்சி பெற்றிருந்தாலும், நகரத்தின் ஒரு முக்கிய பிரச்சனை – குப்பை மேலாண்மையின்மை – இன்னும் தீராததாகவே உள்ளது.

நகராட்சி பணியாளர்கள் தினமும் வீடுகளிலிருந்து குப்பைகளை சேகரித்து செல்கின்றனர். ஆனால் சேகரிக்கப்பட்ட குப்பைகள் சரியான முறையில் நிர்வகிக்கப்படாமல், நகரின் சில புறப்பகுதிகளில் சாலையோரத்தில் திறந்தவெளியில் குவித்து வைக்கப்படுவது வழக்கமாகிவிட்டது. இதனால் சுற்றுச்சூழல் மாசு, துர்நாற்றம், மற்றும் நோய்கள் பரவும் அபாயம் அதிகரித்துள்ளது.

### குப்பை சேகரிப்பு உள்ளது... ஆனால் மேலாண்மை இல்லை!

குப்பை சேகரிப்பு என்பது மேலாண்மையின் முதல் கட்டம் மட்டுமே. அதனை சரியான முறையில் தரம்தரமாக பிரித்து (segregate), மீள்பயன்பாடு செய்யக்கூடியவை, உயிரியல் கழிவுகள், மற்றும் மீள்பயன்பாடு செய்ய முடியாதவை என வகைப்படுத்தி அகற்றுவது தான் முறை.

ஆனால் பட்டுக்கோட்டையில் இத்தகைய நடைமுறை கடைப்பிடிக்கப்படவில்லை. வீடுகளிலிருந்து சேகரிக்கப்பட்ட குப்பைகள் அனைத்தும் ஒரே லாரியில் சேர்க்கப்பட்டு, நகரத்தின் சில குறிப்பிட்ட இடங்களில் திறந்தவெளியில் கொட்டப்படுகின்றன.

மழைக்காலம் தொடங்கியுள்ள நிலையில், அந்தக் குப்பை குவியல்கள் தண்ணீர் தேங்கிய நிலையில் மாறி, கொசுக்களின் இனப்பெருக்க மையமாக விளங்குகின்றன. இதன் விளைவாக டெங்கு, மலேரியா, சிக்குன்குனியா போன்ற ஆபத்தான நோய்கள் பரவும் அபாயம் நிலவுகிறது.

### மழை + குப்பை = கொசு பண்ணை!

மழைநீர் தேங்கிய குப்பைகள் மற்றும் சாக்கடைகள் சேர்ந்து நகரத்தின் பல பகுதிகளில் கொசுக்களை பெருகச் செய்கின்றன. மருத்துவர்கள் எச்சரிக்கின்றனர் – இவ்வாறு தேங்கும் தண்ணீர் மற்றும் குப்பைகள் தான் டெங்கு நோயின் முக்கிய காரணம் என.

### ஒரு குடியிருப்பாளர் கூறுகிறார்:

› “நகராட்சி குப்பையை எடுத்து செல்கிறது. ஆனால் அதை சாலையோரம் ஒரு பெரிய மேட்டாக போட்டுவிட்டு செல்கிறது. அங்கிருந்து துர்நாற்றம் வருது. மழை பெய்தால் எல்லாம் கலந்துவிடுகிறது. கொசு பயத்தால்







குழந்தைகள் வெளியே விளையாட முடியாது.”

இத்தகைய நிலை நகரத்தின் பல பகுதிகளிலும் காணப்படுகிறது – பல இடங்களில் குப்பை மேடுகள் தங்கியிருப்பது வழக்கமாகியுள்ளது.

### சுற்றுச்சூழல் பாதிப்பும் சுகாதார ஆபத்தும்

இந்த திறந்த குப்பை குவியல்கள் நோய் பரப்பும் கொசுக்களுக்கு மட்டுமல்ல, பூச்சிகள் மற்றும் தெருவிலுள்ள மிருகங்களுக்கும் வாழிடமாக மாறுகின்றன. சில சமயம் மழைநீருடன் கலந்த குப்பைகள் வடிகால்களில் அடைப்பு ஏற்படுத்தி நீர்த்தேக்கம் மற்றும் வெள்ளப்பெருக்கு பிரச்சனைகளை உருவாக்குகின்றன.

காற்றில் கலக்கும் துர்நாற்றம், புகை (எரிப்பின் போது), மற்றும் சிதைந்த உயிரியல் கழிவுகள் ஆகியவை சுவாச நோய்கள் மற்றும் அலர்ஜிகள் ஏற்படுத்துகின்றன. இதனால் நகரின் சுற்றுச்சூழல் தரம் கடுமையாக பாதிக்கப்படுகிறது.

### நகராட்சி பொறுப்பு – மக்கள் எதிர்பார்ப்பு

பட்டுக்கோட்டை மாநகராட்சியின் முக்கிய பொறுப்பு, நகரத்தை சுத்தமாகவும் ஆரோக்கியமாகவும் வைத்திருக்க வேண்டும் என்பதே. குப்பை மேலாண்மை என்பது வெறும் சேகரிப்பு அல்ல; அது சரியான அகற்றல், மீள்பயன்பாடு, மற்றும் கண்காணிப்பு ஆகியவற்றை உள்ளடக்கிய முறைமை.

› “மக்கள் தங்கள் வீட்டில் குப்பையை பிரித்து கொடுக்கிறார்கள். ஆனால் நகராட்சி அதை ஒரு சேரவே கொட்டுகிறது. இதற்காக திட்டமிட்ட கழிவு நிர்வாக மையம் தேவை,” என ஒரு சமூக ஆர்வலர் குறிப்பிடுகிறார்.

நகரின் நலனுக்காக, குப்பை சேகரிப்பு மையங்கள் மற்றும் சாலையோர குப்பை மேடைகள் அகற்றப்பட்டு, அவற்றுக்குப் பதிலாக சீரான குப்பை அகற்றும் நிலையங்கள் அமைக்கப்பட வேண்டும்.

### நடவடிக்கை எடுப்பாரா நகராட்சி ஆணையர்?

இப்போது நிலவும் மழைக்கால சூழலில், இந்த பிரச்சனை தீர்க்கப்படாமல் இருந்தால் கொசு தொல்லையும் நோய் பரவலும் பெரும் அபாயமாக மாறும். பொதுமக்கள் அனைவரும் ஒன்றாக கேட்கும் கேள்வி —

“நகராட்சி நிர்வாகமும் இதை கவனத்தில் எடுத்து உடனடி நடவடிக்கை எடுக்குமா?” கண்டுகொள்வாரா ஆணையர் ?

தொடர்ச்சியான கண்காணிப்பு, முறையான குப்பை அகற்றல், மற்றும் விழிப்புணர்வு முகாம்கள் மூலமே இதைத் தீர்க்க முடியும்.

பட்டுக்கோட்டை மக்கள் நம்பிக்கை ஒன்றே —

சுத்தமான சூழல் தான் ஆரோக்கியமான சமூகத்தின் அடித்தளம்.

அந்த சுத்தத்தை உறுதி செய்வது நகராட்சியின் கடமை, அதை நிறைவேற்றும் பொறுப்பு தாமதிக்கக் கூடாது.



# கோவை மாணவி பாலியல் வன்கொடுமை 3 பேரை சுட்டுப் பிடித்த போலீஸார்..!

கோவையில் கல்லூரி மாணவி கூட்டுப் பாலியல் வன்கொடுமை சம்பவத்தில் தொடர்புடைய 3 பேரை தனிப்படை போலீஸார் துப்பாக்கியால் காலில் சுட்டுப் பிடித்தனர். பிடிபட்ட 3 பேரும் கோவை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கோவை விமான நிலையம் அருகே நேற்று முன்தினம் நள்ளிரவு வேளையில் கல்லூரி மாணவி ஒருவர், 3 பேர் கொண்ட கும்பலால் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டார். இந்தச் சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருந்தது. இது தொடர்பாக ஏழு தனிப்படைகள் அமைக்கப்பட்டு போலீஸார் விசாரணை மேற்கொண்டு வந்தனர்.

இந்நிலையில், போலீஸ் தரப்பு கூறிய தகவல்கள்: தனிப்படையினர் பல்வேறு கோணங்களில் விசாரணை மேற்கொண்டு வந்த நிலையில், குற்றம்சாட்டப்பட்ட 3 பேரும் துடியலூர் வெள்ளகிணறு பட்டத்தரசி அம்மன் கோயில் அருகே பதுங்கி இருப்பதாக தகவல் கிடைத்தது. தலைமறைவாக இருந்த அந்த மூன்று பேரை போலீஸார் பிடிக்கச் சென்ற பொழுது அவர்கள் மறைத்து வைத்திருந்த அரிவாளால் போலீஸார் மீது தாக்குதல் நடத்தினர்.

இதில் சந்திரசேகர் என்ற காவலருக்கு இடது கை மணிக்கட்டில் வெட்டு விழுந்தது. காவலரை வெட்டிவிட்டு தப்பி ஓடும்பொழுது மூன்று பேர் மீதும் போலீசார் துப்பாக்கிச் சூடு நடத்தினர். மூன்று பேர் காலிலும் போலீஸார் துப்பாக்கிச் சூடு நடத்திய நிலையில், அவர்கள் கீழே விழுந்தனர்.



அவர்களை பிடித்து விசாரித்தபோது அவர்கள் சிவகங்கை மாவட்டத்தை சேர்ந்த குணா (எ) தவசி, சதீஷ் (எ) கருப்பசாமி, கார்த்திக் (எ) காளீஸ்வரன் என்பது தெரியவந்தது. இதனையடுத்து காலில் துப்பாக்கி குண்டு பாய்ந்த நிலையில், 3 பேரையும் கோவை அரசு மருத்துவமனையில் போலீஸார் சேர்த்தனர். இதேபோல அரிவாளால் வெட்டப்பட்டதில் காயமடைந்த காவலர் சந்திரசேகரும் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

பீளமேடு காவல் ஆய்வாளர் அர்ஜுன் மற்றும் சரவணம்பட்டி காவல் ஆய்வாளர் ஞானசேகரன் ஆகியோர் தப்பி ஓடியவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதில் கருப்பசாமி, காளீஸ்வரன் ஆகிய இருவருக்கும் இரண்டு கால்களிலும் துப்பாக்கி குண்டு பாய்ந்துள்ளது. குணா என்பவருக்கு ஒரு காலில் மட்டும் குண்டு பாய்ந்தது. இவர்களுக்கு கோவை அரசு மருத்துவமனையில் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது.

போலீசார் மேற்கொண்ட விசாரணையில், இந்த மூன்று பேரும் சிவகங்கை மாவட்டத்தை சேர்ந்தவர்கள் என்பதும், இருகூர் பகுதியில் வீடு எடுத்து கட்டிட வேலை பார்த்து வருவதும் தெரியவந்தது. இதில் கருப்பசாமி, காளீஸ்வரன் ஆகிய இருவரும் சகோதரர்கள் என்பதும்,

இவர்கள் 3 பேர் மீதும் ஒரு கொலை வழக்கு, வழிப்பறி, அடிதடி உள்ளிட்ட பல்வேறு வழக்குகள் இருப்பதும் தெரியவந்துள்ளது.

மாணவி கூட்டுப் பாலியல் வன்கொடுமை சம்பவத்தில் தொடர்புடைய 3 பேரும் நள்ளிரவு நேரத்தில் துப்பாக்கியால் சுடப்பட்டு பிடிக்கப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# அரூர் புதிய டி.எஸ்.பி.யாக சதீஸ்குமார் நியமனம்!



அரூர் டி.எஸ்.பி.,யாக பணிபுரிந்து வந்த கரிகால் பாரிசங்கர், கோவை மாவட்டம், கருமத்தம்பட்டி டி.எஸ்.பி.,யாக பணியிடம் மாற்றம் செய்யப்பட்டார்.

கடந்தாண்டு, அக்., மாதம், அரூர் டி.எஸ்.பி.,யாக பொறுப்—பேற்று, ஓராண்டு ஆன நிலையில், கரிகால் பாரிசங்கர் இடம் மாற்றம் செய்யப்பட்டுள்ளார். இந்நிலையில், திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் டி.எஸ்.பி.,யாக பணிபுரிந்த சதீஸ்குமார் அரூர், டி.எஸ்.பி.,யாக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.



# நேற்றைய சொல்லும்.. இன்றைய செயலும்...

அனுதின நிகழ்வுகளின் தங்களுக்கான அழைப்பின் மகிழ்வில்... "விழா மேடை"யிலும், நிகழ்ச்சிகளை கண்டு ரசிக்க கூடியிருக்கும் இளைய சமூகத்திற்கு, நன்னடக்க விழிப்புணர்வு" தந்திட்டவர். கரூர் மாவட்ட குளித்தலை சரகம் காவல் ஆய்வாளர் "கருணாகரன்" அவர்களது பணி சிறக்க "வணங்கி மகிழ்ந்து" வாழ்த்தி வரும் பொதுமக்களின் நலன் காக்கும் சமூக ஆர்வலர்கள்...

# கண்ணகி நகர் கார்த்திகா, அபினேஷுக்கு தலா ரூ. 25 லட்சம்



## முதல்வர் ஸ்டாலின் கௌரவிப்பு!

ஆசிய இளையோர் விளையாட்டுப் போட்டியில் கபடியில் தங்கம் வென்ற கண்ணகி நகர் கார்த்திகா, அபினேஷ் மோகன்தாஸுக்கு தலா ரூ. 25 லட்சம் ஊக்கத்தொகை வழங்கி முதல்வர் மு.க. ஸ்டாலின் கௌரவித்தார்.

பஹ்ரைனில் ஆசிய இளையோர் விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றது. இதில் கபடி விளையாட்டின் இறுதிச் சுற்றில் இந்தியா, ஈரான் அணிகள் மோதின. இதில் இந்திய அணி 75—21 என்ற கணக்கில் வென்று தங்கத்தை வென்றது. இந்த அணியில் தமிழ்நாட்டைச் சேர்ந்த கார்த்திகா இடம்பெற்று மாநிலத்துக்குப் பெருமை சேர்த்தார்.

இதேபோல ஆடவர் அணியும் இந்தப் போட்டியில் கபடியில் தங்கம் வென்றது. ஆடவர் அணியில் திருவாரூர் மாவட்டத்தைச் சேர்ந்த அபினேஷ் மோகன்தாஸ் இடம்பெற்று தமிழ்நாட்டுக்குப் பெருமை சேர்த்தார்.

குறிப்பாக, எளிய பின்புலத்திலிருந்து வந்து இந்தியாவுக்குப் பெருமை சேர்த்ததற்காக கண்ணகி நகர் கார்த்திகாவை தமிழ்நாடு அரசு கௌரவிக்க வேண்டும், ஊக்கத் தொகை வழங்க வேண்டும் எனப் பல்வேறு குரல்கள் எழுந்தன.



இந்த நிலையில் கண்ணகி நகர் கார்த்திகா மற்றும் அபினேஷ் மோகன்தாஸ் ஆகியோர் சென்னை திரும்பினார்கள். சென்னை விமான நிலையத்தில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

விமான நிலையத்திலிருந்து இருவரும் நேராக முதல்வர் மு.க. ஸ்டாலினைச் சந்தித்தார்கள். தமிழ்நாடு அரசு சார்பில் இருவருக்கும் தலா ரூ. 25 லட்சம் ஊக்கத்தொகையை வழங்கி முதல்வர் மு.க. ஸ்டாலின் கௌரவித்தார்.

எக்ஸ் தளப் பக்கத்தில் அவர் பதிவிட்டுள்ளதாவது: தமிழ்நாட்டுத் தங்கங்களுக்கு ஊக்கத்தொகையுடன் உற்சாக வரவேற்பு!

பஹ்ரைனில் நடைபெற்ற ஆசிய இளையோர் விளையாட்டுப் போட்டியில் தங்கம் வென்ற நம் கபடி வீரர்கள் கண்ணகி நகர் கார்த்திகா மற்றும் திருவாரூரைச் சேர்ந்த அபினேஷ் மோகன்தாஸ் ஆகியோர் சென்னை திரும்பியதும், நேராக எனது இல்லத்துக்கு அழைத்துப் பாராட்டி, இருவருக்கும் தலா 25 லட்ச ரூபாய் உயரிய ஊக்கத்தொகை வழங்கினேன்.

கண்ணகி நகருக்கு நான் சென்றபோதெல்லாம் அங்கு வசிக்கும் மக்கள் என்னிடம் வைத்த கோரிக்கைகளை எல்லாம் நிறைவேற்றித் தர உத்தரவிட்டிருந்ததை நினைவுகூர்ந்து, "உங்க ஏரியாவில் இப்ப பிரச்னைகள் தீர்ந்திருக்கா?" என்று கார்த்திகாவிடம் கேட்டேன். கடந்த 4 ஆண்டுகளில் பெருமளவில் கண்ணகி நகர் முன்னேறியிருப்பதாகப் புன்னகையோடு சொன்னார்.

கார்த்திகா அவர்களும் அபினேஷ் அவர்களும் மேலும் சில உதவிகளையும் என்னிடம் கேட்டிருக்கிறார்கள். அவற்றையும் நிறைவேற்றித் தருவோம்.

நேற்று நான் பைசன் காளமாடனில் கண்ட மணத்தி கணேசன் தொடங்கி, இன்று அபினேஷ், கார்த்திகா வரை எளிய பின்புலங்களில் இருந்து சாதிக்கும் ஒவ்வொரு வீரரின் வெற்றியிலும் சமூகநீதி மண்ணான தமிழ்நாடு பெருமை கொள்கிறது" என்று முதல்வர் மு.க. ஸ்டாலின் குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக, மாரி செல்வராஜ் இயக்கத்தில் மணத்தி கணேசனின் வாழ்க்கையை மையமாகக் கொண்டு எடுக்கப்பட்ட பைசன் காளமாடன் திரைப்படம் தீபாவளிக்கு வெளியாக நல்ல வரவேற்பைப் பெற்று வருகிறது. முதல்வர் மு.க. ஸ்டாலின் இப்படத்தைப் பார்த்து இயக்குநர் மாரி செல்வராஜை நேரில் அழைத்துப் பாராட்டினார்.

---

# ஆளாக்கிய அன்னையின் நினைவுதினம்

**(தங்கம்மாள் - சின்னையன்) 05.11.1988**

தலைமுறைகள் மூன்றானாலும் தாய்மைக்கு நிகரில்லை
தலைசாய்ந்து படுத்தாலும் தாய்முகம் அகலவில்லை

பாதைகாட்டிய படிப்புக்கு தாய்உழைப்பே வழிகாட்டி
பாசமாய்தந்த பத்துரூபாய் காவல்வேலைக்கு கைகாட்டி

நித்தம் அலைந்து நிம்மதியை இழந்து நிலையான
வாழ்க்கைக்கு உதவியாய் இருந்து

தாய்முகம் பார்ப்பதற்கு
புகைப்படம் மறந்து
தன்னலத்தை பார்க்காது துயில்வதை துறந்து

கல்வியை கொடுத்தாய் கழனியில் கஷ்டப்பட்டு
குடும்பத்தை காத்தாய் ஏழ்மையில் இன்னல்பட்டு

அன்னையின் ஆளுமை ஆலயமாய் வாழ்கிறது அணையாத
தீபமாய் ஆழ்மனதில் பிரகாசிக்கிறது

பெற்றெடுத்த பிள்ளை பெருமையோடு வாழ்கிறேன்
பெற்றுத்தந்த தாய்முகத்தை தலைவணங்கி தேடுகிறேன்



- சி.சுபாஷ் சந்திர போஸ்,
காவல்துணைக்கண்காணிப்பாளர் (ஓய்வு)

# பேராவூரணி அருகே சொத்து தகராறு.. தம்பி தாக்கியதில் அண்ணன் சாவு

பேராவூரணி அருகே சொத்து தகராறில் அண்ணன் தம்பியிடையே ஏற்பட்ட தகராறில் தம்பி தாக்கியதில் அண்ணன் உயிரிழந்தார்.


ஜவகர்

திருச்சிற்றம்பலம் காவல் சரகம் பொக்கன்விடுதி தெற்கு கிராமத்தைச் சேர்ந்தவர் ராமசாமி மகன் ஜவகர் (45) வெல்டிங் வேலை செய்து வந்தார். இவருக்கு 2 மனைவிகளும் 4 குழந்தைகளும் உள்ளனர். இவரது தம்பி பிரசாந்த் (40). வெளிநாட்டில் வேலை பார்த்துவிட்டு தற்போது ஊருக்கு வந்துள்ளார். பிரசாந்துக்கு மனைவியும் 2 குழந்தைகளும் உள்ளனர். அண்ணன் தம்பியிடையே குடும்ப சொத்து தொடர்பாக நீண்ட நாட்களாக தகராறு இருந்து வந்ததாக கூறப்படுகிறது. இருவரும் அருகருகே தனிதனி வீடுகளில் வசித்து வரும் நிலையில் சொத்து தொடர்பாக இருவருக்கும் வாய் தகராறு ஏற்பட்டு, கைகலப்பாக மாறியுள்ளது. இதில் தம்பி பிரசாந்த் இரும்பு பைப்பால் அண்ணன் ஜவகரை தலையின் பின்பக்கம் தாக்கியதில் பலத்த காயமைடைந்து ரத்த வெள்ளத்தில் ஜவஹர் துடித்தார். அருகில் உள்ளவர்கள் ஆபத்தான நிலையில் ஜவகரை மீட்டு சிகிச்சைக்காக பேராவூரணி அரசு மருத்துவமனையில் சேர்ந்தனர். மருத்துவ மனையில் சிகிச்சை பலனின்றி ஜவஹர் பரிதாபமாக இறந்தார்.

இது குறித்து திருச்சிற்றம்பலம் போலீஸ் இன்ஸ்பெக்டர் பெரியசாமி சம்பவ இடத்தை பார்வையிட்டு, வழக்குப்பதிவு செய்து பிரசாத்தை தேடி வருகின்றனர். சொத்து தகராறில் தம்பி, அண்ணனை கொலை செய்த சம்பவம் திருச்சிற்றம்பலம் பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

---

# பட்டாவில் பெயர் சேர்க்க ரூ.17 ஆயிரம் லஞ்சம்... விஏஓ கைது!

பட்டாவில் பெயர் சேர்க்க ரூ.17 ஆயிரம் லஞ்சம் வாங்கிய விஏஓவை லஞ்ச ஒழிப்பு போலீசார் கைது செய்தனர்.



திருப்பூர் மாவட்டம் பல்லடம் தாலுகா காட்டூர் பகுதியை சேர்ந்தவர் ராமமூர்த்தி(38). அவரது தந்தையின் பெயரில் உள்ள நிலத்தில் தனது பெயரை சேர்க்க காட்டூர் விஏஓ ஜெயக்குமாரிடம்(51) விண்ணப்பம் செய்தார். இதற்கு லஞ்சம் கொடுக்க வேண்டும் என ஜெயக்குமார் கூறினார். அதனை கொடுக்க விரும்பாத ராமமூர்த்தி லஞ்ச ஒழிப்பு போலீசில் புகார் அளித்தார்.

அவர்கள் அறிவுரைப்படி ராமமூர்த்தி ரூ.17 ஆயிரம் லஞ்சப்பணத்தை கொடுத்தார். அதனை வாங்கிய ஜெயக்குமாரை அங்கு மறைந்திருந்த திருப்பூர் லஞ்ச ஒழிப்பு டிஎஸ்பி ரவிச்சந்திரன் தலைமையிலான போலீசார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.



# வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம்...

## வீடு வீடாக வரும் அதிகாரிகள்!

பீகாரைத் தொடர்ந்து தமிழ்நாடு உள்ளிட்ட 12 மாநிலங்களிலும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த நடவடிக்கை வரும் நவம்பர் 4ஆம் தேதி தொடங்கும் என தேர்தல் ஆணையம் அறிவித்தது. தேர்தல் ஆணையத்தின் இந்த முயற்சிக்கு, திமுக உள்ளிட்ட கூட்டணி கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.

இந்த விவகாரம் தொடர்பாக கடந்த 2ஆம் தேதி திமுக தலைமையில் அனைத்துக் கட்சி கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்தில், பல முக்கியமான முடிவுகள் எடுக்கப்பட்டது. குறிப்பாக வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த நடவடிக்கையை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் முறையிடவுள்ளதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதன்படி, இந்த திருத்த நடவடிக்கையை தடை விதிக்க கோரி உச்ச நீதிமன்றத்தில் திமுக சார்பில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. வாக்காளார் தீவிர திருத்தம் செய்வது என்பது ஜனநாயகத்திற்கு எதிரானது என்றும், தமிழகத்தில் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் இதனை அனுமதிக்க முடியாது என்றும் திமுகவின் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில், தமிழகத்தில் (04—11—25) வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த நடவடிக்கை தொடங்குறது.

அதன்படி, தமிழகத்தில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் அரசியல் கட்சிகளின் பூத் ஏஜெண்ட்கள் துணையோடு தேர்தல் ஆணைய அதிகாரிகள் இன்று முதல் வாக்காளர்களை கணக்கெடுக்கும் பணியை தொடங்குகின்றனர். அதற்கான படிவங்களை வீடு வீடாக கொடுத்து இடம்பெயர்ந்தவர்கள், ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களில் வாக்காளர்களாக உள்ளவர்கள், படிவங்களை நிரப்பாதவர்கள், ஆவணங்களை வழங்காதவர்கள் ஆகியவற்றவர்களை கண்டறிந்து திருத்தப் பணிகளை மேற்கொள்ளவுள்ளனர்.

இந்த நடவடிக்கை டிசம்பர் 9ஆம் தேதி வரை நடைபெற்று பிப்ரவரி 7ஆம் தேதியன்று வரைவு வாக்காளர்கள் பட்டியலை தேர்தல் ஆணைய அதிகாரிகள் வெளியிடவுள்ளனர்.

# திருவான்மியூரில் ரூட் போர்டு இல்லாமல் மாநகர பேருந்துகளால் பயணிகள் அவஸ்தை!

## பொதுமக்களுக்கான போக்குவரத்து எவ்வளவு பயனளிக்கிறது?



சென்னையின் முக்கிய போக்குவரத்து மையங்களில் ஒன்றான திருவான்மியூர் பேருந்து நிலையம், தினமும் ஆயிரக்கணக்கான பயணிகளை ஏற்றும் மிகப் பெரிய மையமாகும். நகரின் பல பகுதிகளுக்கும், மாநிலத்தின் பல மாவட்டங்களுக்கும் இங்கிருந்து பேருந்துகள் இயக்கப்படுகின்றன. ஆனால், இத்தகைய பரபரப்பான நிலையத்தில்கூட சில அடிப்படை குறைபாடுகள் காரணமாக பயணிகள் பெரும் சிரமத்தை எதிர்கொள்கிறார்கள்.

### இலக்கில்லா பேருந்துகள் – ஒரு பிரச்சனை

பொதுமக்கள் அடிக்கடி எதிர்கொள்ளும் முக்கிய சிக்கல்களில் ஒன்று, பேருந்துகளில் இலக்கு பலகை (Destination Board) தெளிவாக காணப்படாதது. குறிப்பாக அதிகாலை நேரங்களில் புறப்படும் முதல் சில பேருந்துகளில் இலக்கு பெயர் எழுதப்படாமல் இருப்பது வழக்கமாகிவிட்டது. இதனால், எந்த பேருந்து எந்த திசையில் செல்கிறது என்பதை பயணிகள் கணிக்க முடியாத நிலை உருவாகிறது.

அதிகாலை நேரம் என்பதால், அங்கிருந்த தகவல் மையங்கள் திறக்கப்படவில்லை; பணியாளர்களும் சிலர் மட்டுமே இருந்தனர். இதனால் “எந்த பேருந்து எங்கே செல்கிறது?” என்ற அடிப்படைத் தகவல்கூட பயணிகளுக்குக் கிடைக்காத நிலை ஏற்பட்டுள்ளது.

### புதுப்பிப்பு பணிகளும் வழிகாட்டி குறைவுகளும்

திருவான்மியூர் பேருந்து நிலையம் புதுப்பிப்பு மற்றும் மேம்பாட்டு பணிகளில் உள்ளது. இதன் காரணமாக, பல வழிகாட்டும் பலகைகள், ஒலி அறிவிப்பு அமைப்புகள், மற்றும் திசை குறிக்கும் குறிகள் அகற்றப்பட்டுள்ளன. புதியவர்களுக்கு எந்த மேடையில் எந்த வழித்தடத்துக்கான பேருந்து நிற்கிறது என்பதை கண்டறிவது கடினமாகிறது.

சில பயணிகள் இதை குறித்து, “புதுப்பிப்பு வேலை நடப்பது புரிகிறது, ஆனால் அதற்கிடையில் பயணிகளுக்குத் தற்காலிக வழிகாட்டி பலகைகள் அல்லது அறிவிப்பு ஒலி ஏற்பாடுகள் செய்யலாம் அல்லவா?” என்று கேள்வி எழுப்புகின்றனர். இதுபோன்ற குறைகள் காரணமாக பொதுமக்கள் அரசுப் போக்குவரத்தில் நம்பிக்கை இழக்கும் அபாயம் உள்ளது.

### தனியார் போக்குவரத்துக்கு மாறும் நிலை

இலக்கு பலகை இல்லாமை, வழிகாட்டி குறைபாடு போன்ற சிக்கல்கள், பயணிகளை கட்டாயமாக தனியார் போக்குவரத்துக்கு தள்ளுகின்றன. வாடகை ஆட்டோ, கார், பைக் போன்ற சேவைகள் இதனால் அதிகம் பயன்படுகின்றன. இது பயணிகளுக்கு கூடுதல் செலவாக மாறுகிறது.

சிலர் இதை குறித்து போக்குவரத்து துறை கவனத்தில் கொள்ள வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளனர். “அரசு பேருந்துகள் மக்கள் வசதிக்காக தான். ஆனால் அடிப்படை விஷயங்களில் கூட அலட்சியம் இருந்தால் மக்கள் வேறு வழியை நாடுவார்கள்,” எனப் பொதுமக்களின் குரல் ஒலிக்கிறது.



### பொதுமக்களுக்கு பயன்படும் போக்குவரத்தா?

அரசு போக்குவரத்து அமைப்புகள் மக்களின் அன்றாட வாழ்க்கையின் முக்கிய அங்கமாகும். குறைந்த கட்டணத்தில் நகரத்தின் எந்த மூலையிலும் செல்லும் வசதி தருவதன் மூலமே அரசுப் போக்குவரத்து அமைப்பு மக்களிடையே நம்பிக்கையை நிலைநிறுத்துகிறது.

ஆனால் வழிகாட்டி பலகைகள், தகவல் மையங்கள், மற்றும் ஒலி அறிவிப்புகள் போன்ற அடிப்படை வசதிகள் சரியாக பராமரிக்கப்படாவிட்டால், அந்த நம்பிக்கை தளர்ந்து விடுகிறது. மக்கள் பாதுகாப்பாகவும் சிரமமில்லாமலும் பயணம் செய்யும் சூழல் உருவாக்குவது போக்குவரத்து துறையின் அடிப்படைப் பொறுப்பு என்பதில் யாருக்கும் ஐயமில்லை.

### மாற்றத்திற்கான எதிர்பார்ப்பு

திருவான்மியூர் போன்ற பெரிய நிலையங்களில் நிலவும் இத்தகைய குறைகள் தீர்க்கப்பட வேண்டியது மிக அவசியம். தற்காலிகமாகவேனும் தெளிவான இலக்கு பலகைகள், ஒலிப்பரப்பு அறிவிப்புகள், மற்றும் பயணிகளுக்கான தகவல் மையங்கள் அமைக்கப்பட்டால் பிரச்சனைகள் குறையக்கூடும்.

மேலும், புதுப்பிப்பு பணிகள் நடக்கும் நிலையங்களில் பயணிகள் குழப்பமடையாத வகையில் திசை குறிக்கும் சின்னங்கள் மற்றும் அறிவிப்பு பணியாளர்கள் நியமிக்கப்பட்டால் பொதுமக்களின் நம்பிக்கை மீண்டும் பெறப்படும்.

போக்குவரத்து துறை கடந்த சில ஆண்டுகளில் புதிய வசதிகளை அறிமுகப்படுத்தியிருந்தாலும், இதுபோன்ற அடிப்படை சீர்மைகள் தொடர்ந்து கவனத்தில் கொள்ளப்பட வேண்டும் என்பதே மக்கள் எதிர்பார்ப்பு.

பொதுமக்கள் நம்பிக்கையுடன் பயன்படுத்தக்கூடிய அரசு போக்குவரத்து அமைப்பு என்பது நகரத்தின் உயிர்நாடி போன்றது. அதனை சீராகவும் தெளிவாகவும் இயங்கச் செய்வது அரசு மற்றும் நிர்வாகத்தின் கடமை.

### பயணிகளுக்காக இயங்கும் பேருந்துகள், பயணிகளுக்கே சிக்கலாக மாறாமல் —

“பயணிகளை அவர்களின் இலக்கிற்கு பாதுகாப்பாகவும் தெளிவாகவும் அழைத்துச் செல்லும் உண்மையான மக்கள் சேவையாக” மாற வேண்டும் என்பதே அனைவரின் நம்பிக்கை.

# கீழே கிடந்த 10 சவரன் நகையை உரியவரிடம் ஒப்படைத்த எலக்ட்ரீசியன் பாஷா.

## நேர்மையே மனிதனின் உண்மையான நகை என பாராட்டிய காவல்துறை



*26.10.2025* இரவு லீபஜார் பாலத்தின் கீழ் பாஷா (58), த/பெ அப்துல் சுகூர், ரெட்டிப்பட்டி, சேலம் அவர்கள், தனது மனைவி பர்வீன் இருவரும் வீட்டிற்கு செல்லும்போது, ஒரு லேடீஸ் ஹேன்ட் பேக் கிடப்பதை எடுத்து பார்க்க அதில் ஒரு தங்க தாலி கொடி, ஒரு ஆரம், ஒரு பர்ஸ், ATM கார்டு மற்றும் PAN கார்டு இருந்துள்ளது. எனவே அந்த பையை உரியவரிடம் ஒப்படைக்க வேண்டும் என்ற எண்ணத்தில், 27.10.2025 காலை, அவரது மகன் ஆட்டோ ஓட்டுநர் அப்துல்லா மூலம், பையை சேலம் மாநகர காவல் துணை ஆணையாளர் திரு.கேழ்கர் சுப்ரமணிய பாலசந்திரா இ.கா.ப., (தெற்கு) அவர்களிடம் ஒப்படைத்தனர்.

காவல் துணை ஆணையாளர் அவர்கள், அந்த நகைகளை உரியவர்களான செவ்வாய்பேட்டையை சேர்ந்த பூங்கோதை என்பவரிடம் ஒப்படைத்ததுடன், பாஷா, அவரது மனைவி பர்வீன், மற்றும் அப்துல்லா ஆகியோரின் நேர்மை, நற்பண்பு, சமூகப்பொறுப்புணர்வை பாராட்டி வாழ்த்துகளை தெரிவித்தார்.

இத்தகைய நேர்மையான குடிமக்கள் சமூகத்தின் பெருமையாக திகழ்கிறார்கள்.

நேர்மையே மனிதனின் உண்மையான நகை!

# சிறுவனுக்கு பள்ளி படிப்பை தொடர உதவிய காவல் ஆய்வாளருக்கு பாராட்டு!!



T 12 பூந்தமல்லி காவல் நிலைய ஆய்வாளர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள், சேக்காடு பகுதியைச் சேர்ந்த சிறுவனுக்கு பள்ளி படிப்பை தொடர உதவி செய்ததை தொடர்ந்து ஆவடி காவல் ஆணையாளர் அவர்கள், காவல் ஆய்வாளர் மற்றும் சிறுவனை நேரில் அழைத்து வாழ்த்துக்களையும், பாராட்டுகளையும் தெரிவித்து, சிறுவனுக்கு நன்றாக படிக்க அறிவுரைகளை வழங்கி சிறப்பித்தார்கள்.

# Z System Intelligent Controls Private Limited

Intelligence in Automation

We are prominent Industrial automation solution provider having strong knowledge and expertise in handling automation products like PLC, HMI/SCADA, VFD, PID controllers, Field transmitter, Switches, Sensors etc.

We areconversant in handling IOT, VR & AR applications

We offer complete sales, Engineering & Application development and Commissioning support services across India.

## Our Principles & Products

SIEMENS



PLC,HMI,Scada,VFD,IOT Solutions, RFID

azbil



Temperature Controller, Recorders, Switch, Sensors

TURCK



Sensors, Connectivity. Interface technology Analysers

AR, VR, ER Developement




## Our Service


Power


Water & Waste water


Metro


SPM


Cement


Metal


Smart World

## Our Clients

## Contact Address

Plot No.36
27th Street
Thillai Ganga Nagar
Nanganallur
Chennai-600061
Website : www.zsystem.in

Plot No.22,23, Amal Nagar, Tambaram
Chennai-600045.Tamilnadu, India.
Phone : 098404 53136

/zsystem.in

/zsystem_in

/z-system-intelligent-controls-pvt-ltd

தலித் தலைமையை தமிழக அரசியலில் இருந்து புறக்கணிக்க நினைக்கும் அதிதீவிர திருமா எதிர்ப்பாளர்கள் அவ்வப்போது சிறுத்தைகள் மீது விமர்சனம் வைப்பது வாடிக்கயானதும், வேடிக்கையானதும் கூட...

அதில் சிலர் வைக்கும் விமர்சனங்கள் வினோதமானவைகளாக இருக்கும். சிலர் அதிதீவிர தலித் ஆதரவாளர்கள் போலவே முகமூடி போட்டுக்கொண்டு வருவார்கள். எது எப்படியோ விமர்சனம் செய்யவேண்டும், திருமாவை எதிர்க்கவேண்டும் அவ்வளவே அவர்களது நோக்கம்.

திருமாவளவன் தலித் அரசியல் பேசும் போது சாதித்தலைவன் என்றும்; தமிழ்தேசிய அரசியல் பேசும்போது தலித்துகளை திருமா கைவிட்டுவிட்டார் என்றும்; இசுலாமியர்களின் உரிமைக்கு பேசும் போது அது இவருக்கு தேவையில்லாத ஒன்று என்றும், கம்யுனிசம் பேசும்போது அதற்குத்தான் கம்யூனிஸ்டுகள் இருக்கிறார்களே இவர் ஏன் அதை பேசுகிறார் என்றும் விமர்சிப்பது உண்டு....

தாழ்த்தப்பட்டவன் ஒருவன் இந்திய அளவில், அதையும் தாண்டி உலக அளவில் பேசப்படுகிறானே என்ற எரிச்சலில் வரும் உளறலே அவை. அதன் தொடர்ச்சியாக தற்போது விடுதலைசிறுத்தைகள் கட்சியில் இருக்கும் தாழ்த்தப்பட்ட மக்களை விடுதலை சிறுத்தைகள் கட்சியில் இருந்து பிரித்து வேறொரு இயக்கத்திற்கு கொண்டு சொல்ல, சில முற்போக்கு முகமூடி போட்டுக் கொண்டிருக்கும் கும்பல்கள்




துடியாய் துடிக்கிறார்கள். ஆகவே தான் தொடர்ந்து வெறுப்பு பிரச்சாரத்தை கந்தக அமிலம் போல வீசி வருகிறார்கள்....

அவர்களுக்கு தி.மு.க, அ.தி.மு.க, ம.தி.மு.க, பா.ம.க. காங்கிரஸ், தே.மு.தி.க. போன்ற இன்ன பிற கட்சிகளில் தாழ்த்தப்பட்ட மக்கள் இருப்பது பற்றி எவ்வித கவலையும் கிடையாது... தமிழகத்தில் தலித் இயக்கம் என்றாலே, திருமாவளவன் பெயர் முந்திக் கொண்டு வருவதில் எரிச்சல் அடைந்த அவர்கள், எப்பாடுபட்டாவது விடுதலைச் சிறுத்தைகள் கட்சியை உடைத்து விடலாம் என்று பகல் கனவு காணுகிறார்கள். அவர்களுக்கு...

"சிந்திய ரத்தம் வீண்போகாது
சிறுத்தைகள் படை பின்வாங்காது"
இவ்வரிகளை நினைவு படுத்துகிறேன். எங்களை (விடுதலைச்சிறுத்தைகளை) வளர்த்த தாலாட்டு மொழிகள் இவை போன்றவை தான். எந்த ஆதரவுக்கரமும் இன்றி, நெருக்கடி நிலைகளிலே மைல்கல், மைல்கல்லாக பாய்ந்து வந்திருக்கிறோம். இன்னமும் பாய்ச்சலோடு இருக்கிறோம்...

தஞ்சை.லெனின்
வழக்கறிஞர்

Owned, Published And Printed By **R.SIVAKUMAR** Printed At **CHENNAI OFFSET PRINTERS**, 19/1, 21/2, Kitabathkhan Bhandur Street, Ellis Road, Chennai - 600002. Published From No.14/88, 3rd Main Road, Venkateswara Nagar, Velachery, Chennai - 600042 Editor: **R.SIVAKUMAR**

CHIMPANZ LEARNING HUB

*Learn*

## Website Creation


Step by Step WordPress Beginner level Program

*3 Days Online*

# COURSE

With Certificate

Discover new skills and achieve your goals Build Your Dream website – No coding required! Join our program and learn to create your own website easily and effectively.




STUDENT OFF *Available*


FOR EVERYONE: From Side-Hustlers & Bloggers to Small Businesses & Students. If you can use a computer, you can build your website in 3 days!

- Live Q&A Sessions
- Affordable Course Fees

**Contact Us:**

admin@chimpanzlearninghub.in

**LIMITED SEATS ! REGISTER TODAY**




Follow us

Call Us
9962012354

Mail Us
Info@geesysindia.com

Learn more
www.geesysindia.com